# பொங்கும் காதல்

அல்லது

# மங்களபாரதி

12 DEC 1935

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதியது

JL
m211,M122JM
N35·12·8

182979.

சென்னை 600 008

பிரசுராலயம்:

"ஜகன்மோகினி" ஆபீஸ்.,

26, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை.

1935

[விலை ரூ. 2.

JL
m211,M122JM
N35·12·8.
182979

PRINTED AT
THE TATA PRESS,
5, THAMBU CHETTY STREET, MADRAS.

# பொருளடக்கம்


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | குற்ற மறிதல் கற்றோர்க் கழகு ... | 1 |
| 2. | மோச வலைக்குள் மாசற்ற கிள்ளை ... | 14 |
| 3. | இன்ப நேசம், துன்ப விலாசம் ... | 25 |
| 4. | சோதனை! சோதனை!! ஈசனின் சோதனை!!! ... | 38 |
| 5. | அன்பின் சிகரம்—அணங்கின் துயரம் ... | 49 |
| 6. | அஞ்சா நெஞ்சம்—பஞ்சமா பாதகம் ... | 69 |
| 7. | எண்ணாத உதவி—புண்ணான இதயம் ... | 82 |
| 8. | யுவர்களின் கொண்டாட்டம்—யுவதியின் திண்டாட்டம் ... | 92 |
| 9. | துயரம் மிஞ்சினால் உயிரும் த்ருணமே! ... | 103 |
| 10. | நீதிக்கு முண்டோ ஆதர வின்மை ... | 117 |
| 11. | முன்னர் இன்பம்—பின்னர் துன்பம் ... | 132 |
| 12. | கலையாத உறுதியே நிலை பெற்ற செல்வம் ... | 145 |
| 13. | அலைந்திடும் இதயம்—கலக்கிடும் செய்தி ... | 157 |
| 14. | சிறகொடிந்த பறவைகள்—மருமகன் பிரஸன்னம்.. | 170 |
| 15. | சிறைச்சாலையின் வைபவம்—நிரபராதிகளின்—பரிபவம் ... | 187 |
| 16. | கருமியின் மோசம்—சிறுமியின் பாசம் ... | 199 |
| 17. | ஈசனின் சோதனை—நேசனின் வேதனை ... | 215 |
| 18. | ஏழைக்கு உதவுதல் ஆழியினும் பெரிதே ... | 235 |
| 19. | துயரப் பதுமை—உயரிய தலைவி ... | 248 |
| 20. | செப்பறியாத் துயரம்—துப்பறியும் வீரர் ... | 262 |
| 21. | காதல் ஊற்று—கலகக் கூத்து ... | 289 |
| 22. | வீராதி வீரனின் கோரமான சம்பவம் ... | 299 |
| 23. | வேதனையின் அம்பு—சோதரியின் அன்பு ... | 311 |
| 24. | மிக மிகத் துயரம்—அகமகிழ்ச் சந்திப்பு ... | 323 |
| 25. | வேம்பு கரும்பாயிற்று—வஞ்சனை நஞ்சாயிற்று ... | 337 |
| 26. | அட்டகாஸக் கூட்டத்திற்கு இரட்டை நாமம் ... | 354 |
| 27. | சிக்கு விடுபட்ட பக்குவக் குடும்பம் ... | 364 |
| 28. | சந்தோஷச் சூரியனின் மந்தகாச உதயம் ... | 376 |

## ஸ்ரீமதி

# வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

| | "ஜகன்மோகினி" | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை | | |
| | ரூ. | அ. | பை. | | ரூ. | அ. | பை. |
| வைதேகி (2 பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| ராதாமணி (2-பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| சாருலோசனு (2-பாகங்கள்) | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| பத்மசுந்தரன் | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| காதலின் கனி | 2 | 8 | 0 | ... | 2 | 0 | 0 |
| நவநீதகிருஷ்ணன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| ருக்மிணீகாந்தன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| சாமளநாதன் | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| தியாகக்கொடி | 2 | 0 | 0 | ... | 1 | 12 | 0 |
| சண்பகவிஜயம் | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| கௌரீமுகுந்தன் | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| ஸாரமதி | 1 | 12 | 0 | ... | 1 | 8 | 0 |
| சோதனையின் கொடுமை | 1 | 8 | 0 | ... | 1 | 4 | 0 |
| பரிமளகேசவன் | 1 | 4 | 0 | ... | 1 | 0 | 0 |
| உத்தமசீலன் | 1 | 4 | 0 | ... | 1 | 0 | 0 |
| சுகந்தபுஷ்பம் | 1 | 0 | 0 | ... | 0 | 14 | 0 |
| கதம்பமாலை | 1 | 0 | 0 | ... | 0 | 14 | 0 |
| கோபாலரத்னம் | 0 | 14 | 0 | ... | 0 | 12 | 0 |
| புத்தியே புதையல் | 0 | 14 | 0 | ... | 0 | 12 | 0 |
| பட்டமோ பட்டம் | 0 | 10 | 0 | ... | 0 | 8 | 0 |
| நளினசேகரன் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| வீரவஸந்தா | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| மூன்று வைரங்கள் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| படாடோபத்தின் பரிபவம் | 0 | 8 | 0 | ... | 0 | 6 | 0 |
| பக்ஷமாலிகா | 0 | 6 | 0 | ... | | ... | |
| ஜெயஸஞ்சீவி | 0 | 4 | 0 | ... | | ... | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | 0 | ... | | ... | |
| சுகுணபூஷணம் | 0 | 4 | 0 | ... | | ... | |

ரூ. 24¾ முன் பண மனுப்புவோருக்கு 27 நாவல்களும் தபாற் செலவின்றி அனுப்பப்படும்.

ரூ. 5க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினுல் தபாற் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

## 25-வது அதிகாரம்

### வேம்பு கரும்பாயிற்று—வஞ்சனை நஞ்சாயிற்று

உலகத்தில் ஒவ்வொரு விதமான அன்பும் மக்களை ஒவ்வொரு தனித்த ருசியுடன் மகிழ்விக்கின்ற அபாரமான சக்தி வாய்ந்தது. குழந்தை அன்பிலிருந்து கிழங்கள் அன்பு வரையிலும் உயர்ந்த உணர்ச்சியுடன் கூடி விளங்கும் தன்மை படைத்தது. அந்தந்த காலத்தில் அதது திகட்டாத தேவாம்ருதமாக விளங்கும். அன்பினால் பிணைக்கப்படாத மக்கள் உலகில் உண்டா? இதற்குள் இது உயர்வு என்பது போல அபார சக்தியுடன் விளங்கும் அன்பிற்குள் மிக மிக உயர்ந்தவை தாயன்பு, சகோதர அன்பு, தந்தையன்பு, சதிபதிகளின் அன்பு, புத்திர வாத்ஸல்ய அன்பு, உத்தமமான சத்குண சினேகித அன்பு இவைகள் தான் முதன்மை பெற்றவை—சிகரம் போன்றவை—என்று கூறவேண்டுமா!

சகோதர அன்பில் கட்டுப்பட்டுக் கலங்கிக் கதறித் தவிக்கும் காரிகை நமது பாரதியின் மனத் தாங்கலை விவரிக்க முடியுமா! அவளால் சகிக்க முடியாது மூர்ச்சை யடைந்துவிட்டதைக் கண்ட அருகிலிருந்த மாணவிகள் திடுக்கிட்டார்கள். "ஐயோ பாவம்! ஏற்கெனவே கவலைக் கடலில் மிதக்கும் இந்த பேதைக்கு இன்னும் என்ன துயரம் வந்துவிட்டதோ தெரியவில்லையே!" என்று மிகுந்த பதைபதைப்புடன் பாரதி யருகில் வந்து "பாரதீ! பாரதீ! என்னம்மா செய்தி! ஏன் புலம்புகிறாய்?" என்று சில மாணவிகள் வெகு அன்புடனும் மரியாதையுடனும் கேட்டார்கள்.

தன்னிரை யழிந்து புலம்பித் தவிக்கும் பாரதிக்கு சிறிது நேரஞ் சென்று சற்று தெளிவு உண்டாகியது. கண் திறந்து பார்த்

தால் பத்திரிகையில் படித்த விஷயம் மனத்தைத் தாக்குகிறது. அங்கு பாரதிக்கு மிகவும் சினேகிதையான சூடாமணி என்ற பெண்ணை நோக்கி "சூடாமணீ! என்னை ஈசன் எத்தனை விதத்தில் சோதனை செய்யவேண்டுமோ அத்தனையும் செய்துவிட்டார். இனி எனது உயிர்தான் பாக்கி. இதோ பார் இந்த பத்திரிகை விஷயத்தை.

அந்தோ! என் அண்ணனை உயிருடன் நான் பாராது பலி கொடுத்துவிட்ட போதிலும் ஏதோ ஒரு இடத்தில் உயிருடன் இருக்கிறன் என்ற ஒரு சிறிது சாந்தியாவது பெற்றிருந்தேனே, அதுவும் போய்விட்டதே! நல்ல அறிவு படைத்த மக்களுக்கே ஆயிரம் விபத்துக்கள் தெரிந்தும் தெரியாமலும் நேரும்பொழுது சித்த ஸ்வாதீனமற்ற என் அண்ணனின் கதி என்ன ஆகுமோ ?

தெருவில் எங்கு எப்படி அலைகின்றனோ! யார் யார் அவன் மீது கல்லையும் கட்டியையும் எறிந்து பரிகஸிக்கின்றர்களோ! பணக்காரன் பின்னே பத்து பேர் பயித்தியக்காரன் பின்னே பத்து பேர் என்பது போல எத்தனை பெயர்கள் அவன் பின்னல் சுற்றுகிறர்களோ! வீதியில் செல்லும் மோட்டார் எமனுலும் மாடுகளினுலும் என்ன ஆபத்து நேர்ந்துவிட்டதோ! வயிற்றிற்கில்லாது பட்டினியாகத் தவிக்கின்றனோ?

புத்தி ஸ்வாதீனமில்லாது யாரையாவது அடித்தோ திட்டியோ அதனுல் உதை பட்டு வசவு வாங்கித் தவிக்கின்றனோ! போலீஸார் பிடித்துக் கொடுத்துவிட்டார்களோ? ஐயோ! சூடாமணீ! ஒன்றுமே தெரியவில்லையே! இவைகளை நினைக்க என் மனம் வெடித்துவிடும் போலச் சித்திரவதை செய்கின்றதே! என்ன செய்வேன்? ஐயோ! எனக்கு திக்கா வக்கா ? பக்ஷிகளுக்காவது ஒண்டிக்கொள்ள ஒரு மரம் உண்டு. அனுதையிலும் அனுதையாகிய எனக்கு அதுவு மில்லையே! என் இதயம் துடிக்கிறதே! நான் யாருடைய உதவியைப் பெற்று என் அண்ணனின் தகவலை யறிவேன்?

பயித்தியக்காரர்களை வீதியில் ஜனங்கள் படுத்தும் பாட்டை

நான் கண்ணால் கண்டிருப்பதெல்லாம் இப்போது என்னினைவிற்கு வந்து என் கவலையை அதிகரிக்கச் செய்கிறதே! பயங்கரத் தோற்றங்களெல்லாம் என் மனத்தில் உண்டாகின்றனவே. ஆஸ்பத்திரியில் இருந்தான்; குணமாயிற்று; வீட்டிற்கு வந்தான்...அல்லது குணமாகாமலேயே இறந்துவிட்டான். என்ற செய்தியுட னிருக்கலாகாதா! இம்மாதிரி தெருவில் தவிக்கும் கோரக் காட்சியைக் கேட்டு வருந்தும் விதியும் அமைய வேண்டுமா?'' என்று கதறுகிறாள்.

பெரும் பித்தம் பிடித்தவள்போலாகிவிட்டாள். முன்பு இருந்த தலைவிக்கு நேர்மாறாக ஒரு தூமகேது இப்போது தலைவியாக வந்திருப்பதால் மாணவிகளின் வெறுப்பும் மனக் கசப்பும் அதிகரித்தன. அந்த தலைவியால் ஒரு மாணவியும் சந்தோஷ மடையவில்லை யாகையினால் இந்த விஷயம் அவளுக்குத் தெரிந்தாலும் ஒரு லாபமும் இல்லை. இன்னும் ஆபத்துத்தான் என்பது மாணவிகளுக்குத் தெரியுமாதலால் ஒரு விதமான உதவியையும் அவனிடம் எதிர் பார்க்கவில்லை.

இதைக் கேட்ட எல்லா மாணவிகளும் கலங்கிக் கும்பிப்போய் என்ன செய்வதென்று தோன்றாது திகைத்தார்கள். எல்லாப் பெண்களும் தலைவியின் ஆதிக்கத்திலிருப்பதால் எந்த விதமான ஆதரவைக் கொடுக்கக்கூடும். ஒன்றும் முடியாமல் தவித்தார்கள். ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தவண்ணம் குழம்பினார்கள். பாரதியின் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு சகிக்கவும் முடியவில்லை. அவளுக்கு எவ்விதமாவது உபகாரம் செய்யவேண்டும் என்கிற எண்ணம் அபாரமாக உண்டாகி வருத்தியது. செய்யும் வழி தெரியாமல் திகைத்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்வித குழப்பத்துடன் இரண்டு தினங்களாகிவிட்டன. இதற்குள் ராஜசேகரன் கைதியாகிய விவரம் பத்திரிகையில் வந்துவிட்டது. அதையும் பாரதி தெரிந்துகொண்டு முன்னிலும் பதின்மடங்கு அதிகமாக விசனத்தை யடைத்து தவித்தாள். இந்த இடத்தில் அவளால் இருக்கவே மனம் பொறுக்கவில்லை. துள்ளிக் குதித்து ஓடிவிடலாமாவென்று பதைக்கிறது. கூண்டிலகப்பட்ட கிளியைப்

போலவும் வலைக்குள்ளகப்பட்ட மானைப் போலவும் தவித்துப் புலம்பு கின்றாள்.

சகோதர வாஞ்சை யொருபுறமும் காதல் அன்பு ஒரு புறமும் இவளைப் பற்றி இழுக்கிறது. ஆகாரத்தைக் கண்டு நாட்கள் பல வாகிவிட்டன. ஒன்றுமே பிடிக்காது வெறுப்புற்றுவிட்டாள். எப்படி இருப்பினும் கேட்பார் இருக்கிறார்களா!

சூடாமணியின் அத்தை மகன் வருடத்திற்கு ஒரு முறை அவளைப் பார்ப்பதற்கு வருவது வழக்கம். அது போன்று அவளைப் பார்க்க வருவதாகக் கடிதம் வந்தது. அதைக் கண்ட உடனே சூடாமணி மிக்க சந்தோஷத்தை யடைந்து தனது சினேகிதையான பாரதியிடம் சென்று "பாரதி! நாளைய தினம் எனது அத்தான் வருவதாகக் கடிதம் வந்திருக்கிறது. எனக்கு ஒரு யோசனை தோன்றுகின்றது. அதாவது உனக்கு வேண்டியவர்கள் யாராவது இருந்தால் நீ இன்றிரவே அவர்களுக்குக் கடிதமொன்று எழுது...இல்லையேல் உனது காதலர்தான் சிறைச் சாலையிலிருப்பதாகத் தெரிகிறது; அவருக்கு எழுதி அவர் மூலம் மாசிலாமணியைப் பற்றிக் கவனிக்க ஏற்பாடு செய்யும்படி எழுது. அவர் சிறைச்சாலையிலிருந்தாலும் மற்றவர்களுக்காவது விஷயத்தைக் கூறலாமல்லவா! இந்த கடிதத்தை எப்படியாவது திருட்டுத் தனமாய் அவனிடம் சேர்ப்பித்துவிடுகிறேன்" என்றாள்.

இதைக் கேட்ட பாரதிக்கு, அகோரமான பசியுடன் தவிப்பவனுக்கு ஆகாரம் கிடைத்ததுபோலன்ன சந்தோஷம் உண்டாகியது. சூடாமணியின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "சூடாமணி! எனக்காக நீ எடுத்துக்கொண்டுள்ள ச்ரத்தைக்கும் அன்பிற்கும் நான் என்ன விதமான கைம்மாறு செய்யப்போகிறேன். எனக்கு உடன் பிறந்த சகோதரி இல்லாத குறை, உன்னால் நீங்கியது. நீ சொன்ன படியே எழுதுகிறேன்" என்றாள்.

மறுநாள் சூடாமணியின் அத்தான் வரவை இருவரும் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பகல் இரண்டு மணி சுமாருக்கு

அவனும் வந்து சேர்ந்தான். பாரதியின் கடிதத்தைச் சூடாமணி வாங்கி மடியில் சொருகிக்கொண்டான். ஆசிரமத்து வழக்கப் படிக்கு தலைவி முதலில் அவனை வரவேற்றுப் பிறகு சூடாமணி யுடன் பேச அனுமதி கொடுத்தாள்.

சூடாமணி சமயம் பார்த்துக் கடிதத்தை அவனிடம் கொடுத்து அதை சிறைச்சாலைக்கு அனுப்பி விடும்படிக்கும் கூறிவிட்டாள். இதைக் கேட்ட அவனும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு சென்றுவிட்டான். அந்த மனிதன் அப்படியே கடிதத்தைக் கொண்டு ஜெயிலுக்கு அனுப்பிவிட்டான். அதை ஜெயிலதிகாரிகள் பார்வை யிட்டு ராஜசேகரனிடம் சேர்ப்பித்தார்கள். அந்த கடிதத்தைத்தான் முன்னதிகாரத்தில் கூறியபடி படித்துக் கொண்டி ருந்தான். அது வருமாறு:—

"என்னிதயக் கோயிலில் வீற்றிருக்கும் இன்ப துரையே!

தங்கள் பாத பத்மங்களுக்குச் சாஷ்டாங்க நமஸ்காரங்கள். உங்களுடைய இந்த அனியாய அபாண்டமான பழியையும் சிறைவாஸத்தையும் நான் பத்திரிகை வாயிலாகக் கண்டு நெருப் பின் மீது புழுவெனத் துடித்தேன். விதி என்பது யாரை விட் டது என்ற வேதாந்தத்துடன் சற்று மனந் தேறினேன்.

சந்தோஷ மென்பதைச் சொப்பனத்திலும் கண்டறியாத என்னைப் போன்ற மகா பாப ஜென்மம் உலகத்தில் வேறு எங் கும் காணக் கிடைக்க மாட்டாது. என்னுடைய எல்லாத் துய ரங்களும் போதாதென்று ஈசன் பெரிதாக சோதனை செய்துப் புதிது புதிதாக விசனத்தை யுண்டாக்கி வருத்துகிறான்...உம். ...என் விதிக்கு சர்வ வ்யாபியாகிய சர்வேச்வரன் மீது குறை கூறுவது முட்டாள் தனமன்றோ?

என்னுருயிர்......எனது சகோதரன் மாசிலாமணியின் திடுக்கிடும் செய்தியைப் பத்திரிகையில் நீங்களும் படித்து என் னைப்போலவே தவித்திருப்பீர்களென்று நம்புகிறேன். அதைப் படித்தது முதல் என்னுள்ளம் படும் பாட்டைக்கூறத்திறமன்று.

இரவு பகலாக இதே ஏக்கத்தினால் தவிக்கையில் தங்களுடைய இந்த விஷயமும் சேர்ந்தது. இரண்டும் நெருப்பும் காற்றும் போல என்னை எரித்து வாட்டி வதைக்கின்றன.

நாதா! நான் அனாதையிலும் அனாதை என்பதைத் தமக்குக் கூறவேண்டுமா? தாங்கள் பந்தப்பட்டு இருப்பினும் வேறு யார் மூலமாகவாவது மாசிலாமணியின் விஷயத்தைக் கவனிக்கச் சொல்லுங்கள். அதைப்பற்றி எப்படியாவது எனக்குத் தெரிவிக்கச் செய்யுங்கள். நான் சதா ஈசனையும் அம்பிகையையும் பிரார்த்தனை செய்து தமது சந்தோஷமான விடுதலையை எதிர்பார்க்கிறேன்.

அன்பரே! மனிதனைக் கெடுப்பதற்குப் பலவித சத்ருக்கள் உண்டு. அதாவது முதல் சத்ரு அகங்காரம், இரண்டாவது சத்ரு ஆசை, மூன்றாவது சத்ரு துஷ்ட நேசம், நான்காவது சத்ரு துர்க்குணம். இவை போன்று பல உள. அன்று தங்களை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தும் பேசும் பாக்கியம் பெறாத பாவியானேன். தங்களை அன்று அந்த அயோக்கியன் பேசினதிலிருந்து அபலையான காமுவை ஆதரித்த புண்ணிய சீலர் தாங்கள்தான் என்று தெரிகிறது. அந்த பேதைப் பெண்ணுக்கு ஆதரவளித்ததனால் ஈசன் நன்மையே செய்வார் என்ற நம்பிக்கையை நான் இழக்கவில்லை.

நாதா! தாங்கள் ஆதரித்து இக் கதியை அடைந்தது போல நானும் அவளையும் அவள் குழந்தையையும் காப்பாற்றச் சென்றதனால் பல இடுக்கண்களுக்கு இலக்காகினேன். அவளுடைய சரித்திரம் முற்றும் அறிந்தேன். நான் மேலே தெரிவித்த அத்தனை சத்ருக்களும் கூடி பொன்னுசாமியைக் கெடுத்ததோடு நில்லாது அவனை நம்பிய பேதையையும், அவளுக்காக இரக்கங் காட்டிய நம்மையும் தாக்கின. கடவுள் ஒருவர் இல்லையா! அவர் சகலத்தையும் பார்த்துக் கொள்வார்.

இன்ப துரையே! அந்தச் சண்டாளன் தன்னை யொரு பெரிய மனிதன் போல வேஷ மிட்டுக்கொண்டு என்னை மணம்

செய்துகொள்ள வந்துவிட்டான். கிழவியை மயக்கி என்னை அனியாயமாய்க் கொலை செய்யத் திணிந்த சமயம் என்னை அந்த காமுவே காப்பாற்றினுள். அவளை வேண்டுமென்று அந்த படுபாவி அதோகதியாக்க நினைத்துவிட்டான். இந்த அனீதியைக் கடவுளுமா பார்க்காது இருப்பார்.

ஈடிலா மணியே! நமக்கும் ஓர் நல்ல காலம் பிறக்காமலா போகும். வெய்யிலில் அவஸ்தைப் படுபவனுக்குச் சூரியன் அஸ்தமித்த பிறகு குளிர்ச்சி ஏற்படுவது போல நமது சத்ருக்களை ஈசன் தண்டித்த பிறகாவது நாம் சந்தோஷப்பட மாட்டோமா என்று அந்த ஒரு எண்ணத்தை எதிர்பார்க்கிறேன். என் வினையின் முடிவு எவ்விதமிருக்கிறதோ! நமக்குள் கடவுளால் பரிசுத்தமாக அளிக்கப்பட்டு கரை கடந்து பொங்கும் காதல் புனிதமான மங்கள வாழ்க்கையில் முடியப்போகிறதோ! அன்றி அங்கம் பதறி எரிந்து போகப் போகிறதோ? யாரேயறியவல்லார்.

நாதா! மாசிலாமணியைப் பற்றி கவனித்து எழுதவும். தங்களுடைய இன்னிலைமையில் — ஒருவிதமான உதவியும் செய்ய முடியாத நிலைமையில்—தாமரை இலைத் தண்ணீர் போல தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். என்ன செய்வேன்? சந்தோஷ சூரியன் உதயமாகும் நாள் என்று வருமோ என்று ஏங்கும்

தங்கள் அடிமையான
பாரதி.''

இதைப் படிக்கும்போது ராஜசேகரனின் மனம் இன்பத்தில் துளைந்தது. "என்ன! நம்மைப் போல காமுவை இவளும் காப்பாற்றினுளா! ஐயோ! தகவல் ஒன்றும் விளங்கவில்லையே! அந்த பாவி இவளை மணக்க வந்தானு? என்ன அனியாயம்!...நான் நினைத்தது போலவே மாசிலாமணியின் விஷயத்தைக் கண்டு இடிந்துவிட்டாள். ஐயோ பாவம்! அனுதைப் பக்ஷி போன்று தவிக்கும் இவளுக்கு யார்

ஆதரவு கொடுப்பார்கள். இந்த ரகஸியத்தை இப்போது வெளி யிடவும் கூடாது. என்ன செய்வேன்?

அந்தோ! இக் கஷ்டங்களும் நீங்கி என் காதல் கிளியை சந் தோஷத்துடன் காண்பேனு! அடைவேனு!'' என்று ஏங்கிக்கொண்டி ருந்த சமயந்தான் அங்கு ஜெயில் விசிட்டர்கள் வந்தார்கள். அவர்க ளில் ஒருவர் தன் பிதாவென்பதைக் கண்டதும் மனம் பதறிவிட்ட ராஜசேகரன் எழுந்து நின்ருன்.

விஸிட்டர்களை யழைத்துக்கொண்டு ஜெயில் அதிகாரியும் அங்கு வந்தார். ஜெயில் அதிகாரி அங்குள்ள தேச பக்தர்களில் முக்கியமான சிலரை விஸிட்டர்களுக்குக் காட்டி அவர்களைப் பற்றி அறிமுகம் செய்து வைத்தார். அதே போல சாதாரணக் கைதி களில் சிலரைக் காட்டுவது வழக்கம். அதிலும் பெரிய க்ரிகெட்டு சாம்பியனுன ராஜசேகரன் சிறையில் இருப்பது வியப்பிலும் வியப் பல்லவா! அவனை ஜெயிலர் விசிட்டர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த வரலாற்றைக் கேட்ட விசிட்டர்களில் ராஜனின் தகப்ப னைத் தவிர மற்றவர்கள் வியப்புக் கடலில் மூழ்கியதோடு கைதி என்பதையும் மறந்து ராஜனுக்கு ஷேக் ஹாண்டு செய்தார்கள். அழுகப் பண்டத்தை நல்ல பாத்திரத்தில் வைத்து மூடி இட்டாலும் மூடியைக் கிளப்பிக்கொண்டு நாற்றம் வெளிக் கிளம்பிவிடும்; அதுபோல எந்த மனிதரது இதயம் ஊழலாயும் களங் கத்துடனும் இருந்தால் அதுவும் அவரது முகத்தில் பிரகாசித்துக் காட்டிவிடும்.

பரிசுத்தமாயும் நிர்மலமாயும் இருக்கும் இருதயத்தையுடைய ராஜசேகரனின் முகத்தில் விகாரக் களை எங்கிருந்து உண்டாகும். புன்முறுவலும் காம்பீரமும் குடி கொண்டிருந்தன. அவன் தன் னைக் கை குலுக்கியவர்களுக்கு மரியாதையாக வந்தனம் செய்துவிட் டுத் தன் பிதாவுக்கும் நமஸ்காரம் செய்தான். ஆனுல் பேசவில்லை. அவனும் ராஜனின் முகத்தைக்கூட பார்க்கவில்லை. இதிலிருந்தே

தன்னை இன்னாரென்று தெரிவிக்க வெறுத்து நடக்கிறான் என்பதை ஒரு நொடியில் ராஜன் தெரிந்துகொண்டான். அதற்குத் தக்க படியே அவனும் நடக்க வாரம்பித்தான்.

விசிட்டர்கள் ராஜனின் பந்தாட்டத்தின் அற்புதத்தையும் அதில் அவன் ப்ரசித்தி பெற்று பதக்கங்களும், கப்புகளும் ஏராள மாக வாங்கி ஜனங்களின் மதிப்பிற்குப் பாத்திரமாகியதையும் ஜெயி லருக்கு எடுத்துக் கூறியதோடு அத்தகைய ராஜன் எப்படி கைதி யானான் என்று ஆச்சரியப்பட்டு அவனைப் பார்ப்பதற்காகத்தான் தாங்கள் இன்று வந்ததாயும் தெரிவித்தார்கள்.

அவர்களில் ஒருவர் "சார்! என் மகனுக்கு பந்தாட்ட மென் றால் அளவற்ற பிரியம். அவனுக்கு இந்த ராஜசேகரனின் பிரதாப மும் புகழுந்தான் சதா நினைவு. வாய்க்கு வாய் சொல்லுவான். இவரை நினையாத நேரமில்லை. இவருடைய ஆட்டத்திற்குப் போகாத நாள் கிடையாது. பத்திரிகையில் இவ் விஷயத்தைப் பார்த்து இடிந்துவிட்டான். ஏற்கெனவே சிக்குடன் படுத்திருப்ப தால் துடித்து வருந்துகிறான். இங்கு வந்து பார்க்கத் தவிக்கிறான். ஆனால் ஜெயிலாயிற்றே!...

சார்! அவன் அடிக்கடி சொல்வதுண்டு. "போ அப்பா! நீங்கள் எல்லாம் பிள்ளை பெற்ற உண்மையான ஆநந்தத்தை யடைய முடி யாது. ராஜசேகரனின் பிதாதான் உண்மையான ஆநந்தத்தை யடை யும் பாக்கியசாலி...வயிற்றை யலம்பி ராஜ ரத்தினத்தைப் பெற்றார்" என்று என்னையே இழிவு படுத்திப் பேசுவான் என்று இவர் கூறி முடிப்பதற்குள் கூட வந்த மற்றொருவர்,

போதும் சார்! எல்லாந் தூரத்து மலை பசப்புத்தான். எனக் கும் ராஜனின் பந்தாட்டத்தில் அத்யந்த பிரீதி யுண்டு. என் மகன் இவர்கள் ப்ரீதியில் மூழ்கியவன்தான். நான் ராஜனைப்பற்றி விசா ரித்ததில் அவனைப் பெற்ற பிதா மகா பாவி என்றும், இத்தகைய புத்திர ரத்தினத்தின் யோக்யதையை அறிந்து ஆநந்திக்கக் கொடுத்து வைக்காத த்ரோகி என்றும், அவர் இளையாள் மோகத்தில்

ஈடுபட்டு இந்த மகனையே துறந்துவிட்டதாகவும் இவன் பாட்டனா ரால் விருத்திக்கு வந்ததாயும் அறிந்து வியப்பின்மேல் வியப்படைந் தேன். தான் பெற்ற மகன் என்பதையே மறந்த மாபாவி யவன். இத்தகைய மகனைப் பெற்ற! ஒரு தந்தை எத்தனை மேன்மையாக இருக்கலாம். ஒரு தரம் பந்தாடும்போது ராஜசேகரன் ஸெஞ்சரி யடித்தான். ஆகா! அப்போது அங்குள்ள ஒவ்வொருவரும் ராஜசேக ரனைக் கட்டித் தழுவிக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினார்கள். இவ னுடன் கூட வந்திருந்தவரைத் தான் இவனுடைய பிதாவென்று சிலர் நினைத்து "சார்! உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். எங்களது மனமே இவ்வளவு பொங்குகிறதே! உங்களுடைய ஆனந்தம் எப்படி இருக்கும். நீங்கள் என்ன பாக்யம் செய்தீர்கள்?" என்று சிலர் கேட்டார்கள்.

அதற்கந்த மனிதன் நகைத்துக்கொண்டே "எனக்கந்த பாக்யம் கிடையாதய்யா! நான் இவனுக்குத் தெரிந்த மனிதன். இவனுடைய பிதா உபயோகமற்ற மனிதன். எங்கோ சாணிச் சுருணைபோலக் கிடக் கிறான். அவன் ஒரு மனிதனா! அவன் பெயரையே எடுக்காதீர்கள் சார்! செல்வம் இருந்தும் தரித்திரப்படும் ஜாதகத்தைப் போல அவன் கதி யிருக்கிறது......என்று ஏதேதோ திட்டினான். பிறகு நான் விசாரித்ததிலும் இவ்வாறே தகவல் கிடைத்தது. உம்......எல்லாம் கொடுத்துவைக்கணும். ஐயா! மக்களைப் பெற்றுவிட்டால் மட்டும் ஆய்விட்டதா!" என்று சரமாரியாகப் பொழிகிறார்.

இதைக் கேட்ட ஜெயிலர் "அப்படியா! பெற்ற தந்தையின் மனம் இப்படியும் இருக்குமா! நான் ராஜசேகரனை நேரில் அறியா விடினும் அவன் புகழைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இப் போது நேரில் பார்த்தது முதல் எனக்கே இவனிடம் ஒரு விதமான அன்பு உண்டாகிவிட்டது. கூட்டமோ திறள் திறளாக வந்து ராஜ சேகரன்மீது காட்டும் அன்பைக் காண வியப்பாக இருக்கிறது. என் பெண் இரு முறை பாட்டில் பரிசு பெற்றாள். அதற்கே என் னுள்ளம் பூரித்துவிட்டது. என் பெருமைக்கு எல்லையே இல்லை. இத்தகைய அபாரமான புகழைப் பெற்றுள்ள மகனைக் காணும் பிதா வின் சந்தோஷத்தை அளவிடக்கூடுமா!" என்றார்

இதை எல்லாம் கேட்கும்போது ராஜனின் தேகமும் மனமும் பதைபதைக்கின்றது. "என் பிதாவை எதிரிலேயே வைத்துக்கொண்டு இப்படிப் பேசுகிறார்களே! என்ன செய்வேன்? இவர் முகத்தில் அசடு தட்டுகின்றதே! இவர்தான் எனது பிதாவென்று கூறிவிடட்டுமா!" என்றும் தவிக்கிறான். தந்தையின் முகத்தைப் பார்க்கவும் அஞ்சுகிறான். என்ன செய்வான் பாவம்! க்ஷண நேரம் தவித்தான். உடனே அவனுக்கோர் யோசனை தோன்றியது.

அந்த விசிட்டர்களை நோக்கி "பெரியவர்களே! உலக நியாயத்தின்படிக்கு நீங்கள் சொல்வது சகஜமே! மக்களின்ப வாழ்க்கையில் மனங் களிப்படைவதில் பெற்ற பிதாவை விடச் சிறந்தவர்கள் உண்டா! என் பிதாவின் உள்ளம் எத்தனையோ களிப்புடன்தானிருக்கிறது. அவர் அதை மேலுக்குக் காட்டிக்கொள்ளவில்லை. ஒரு கதையொன்று சொல்வதுண்டு உங்களுக்குத் தெரியாததா!

அதாவது,—மகா புத்திசாலியாயும், உலகோரெல்லாம் மெச்சிப் புகழக்கூடிய ஒரு பிள்ளையின் தகப்பனார் மட்டும் சதா கடுகடு என்று கோபிப்பாராம். தாயார் மட்டும் பக்ஷமாக விருப்பாளாம். மகனுக்குப் பிதாவின்மீது அபாரமான கோபம் பொங்கிவிட்டதாம். உலகமெல்லாம் நம்மைப் புகழ்ந்து கொண்டாடுகையில் இந்தப் பாழுங்கிழம் மட்டும் இப்படி நம்முடைய பெருமை தெரியாது கோபிக்கின்றதே என்று ஆத்திரமடைந்து ஒரு தினம் கிழவர் தூங்குகையில் பெரிய கல்லை தலைமீது தள்ளிக் கொன்றுவிடவேண்டுமென்று தீர்மானித்துக் கிழவர் படுக்கும் இடத்திற்கு நேரே தூலத்தின்மேல் கல்லை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தானும்.

அன்று கிழவர் அருகிலிருந்த கிழவி கிழவரை நோக்கி "நீங்கள் இப்படிச் செய்வது சற்றும் நன்றாக இல்லை, நமது குழந்தையின் பெருமை நாளுக்கு நாள் எப்படி விருத்தியாகிறது பாருங்கள். நீங்கள் மட்டும் அதை யறியாது சதா திட்டினால் அவன் மனது முறிந்துவிடாதா?" என்று கேட்டாளாம்.

அதற்கந்த கிழவர் "அடி பைத்தியக்காரீ! இது உனக்குத் தெரியாதா! பையன் புகழைக் கேட்கக் கேட்க என்னுள்ளம் பொங்கு

வது போல வேறு யாருள்ளம் பொங்கும்? இது கடவுளுக்கன்றே தெரியும். எனது ரத்த ஓட்டமெல்லாம் அவனைப்பற்றிய சந்தோஷ மயமாகவே ஓடுகிறது. நான் அப்படி பெருமைப் படுவதைக் காட்டி பையனைத் தோத்திரம் செய்துவிட்டால் அவனுக்குண்டான புகழ் என்றோ மறைந்துபோயிருக்கும். அவனுக்கு கர்வம் மேலிட்டு மமதை யதிகரித்து தன் புகழுக்குத் தானே சத்துருவாகி இருப்பான். தெரியுமா?

அடி அசடே! நான் சந்தோஷப்படுவதே அவனுக்குத் தெரியக்கூடாது. என்னுடைய கடுமையினால்தான் அவனுக்கு இத்தனை புகழும் ஏற்பட்டது. இதை நினைவில் வைத்துக்கொள்ளு.'' என்றாராம். உயர உட்கார்ந்து கொலை செய்யத் தயாராயிருக்கும் பிள்ளை இந்த வார்த்தையைக் கேட்டதும் உண்மையை யறிந்து திடுக்கிட்டான். தான் செய்யவிருந்த பாதகத்தை எண்ணி வருந்தினான்.

உடனே கீழே குதித்துத் தான் தப்பிதமாக எண்ணிச் செய்யவிருந்த பாதகத்தைக் கூறித் தந்தையின் பாதத்தில் விழுந்து மன்னிப்பு பெற்றானும். அன்று முதல் இந்த விஷயமே உலகத்திற்கொரு ஆதார மாகிவிட்டது. அதே கதையை நான் என்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்திற்கு ஓர் படிப்பினையாக வைத்துக் கொண்டிருக்கிறேன். என் பிதா வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் தனது சந்தோஷத்தை யடக்கிக் கொண்டிருப்பதுதான் எனக்குப் பெரிய ஆசீர்வாதமாகக் கருதுகிறேன். என்னைப் பெற்ற பிதாவுக்கு என் மீது அன்பில்லாமல் யாருக்கு இருக்கும். நீறு பூத்த நெருப்புபோல அவரிருப்பதாக நான் நினைக்கிறேன். அவர் எப்படி இருந்தாலும் என்னுடைய க்ஷேமத்தையேதான் கோருவார்.—

என்று இவன் கூறிக் கொண்டிருக்கும்போதே ராஜசேகரனின் பிதாவின் மனம் படும் பாடும், இதயம் துடிக்கும் துடிப்பும் கூறத் திறமில்லை. அவர்களெல்லாம் தன்னைப் பற்றித் தன் முன்பே தான் இன்னானென்று தெரியாமல் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் அவர் மீது பாணங்கள் பாய்வது போலப் பாய்கின்றது. வெட்கமும் துக்க

மும் வாட்டி வதைக்கின்றது. ராஜசேகரன் எடுத்துக் கூறும் வெகு பொறுமையான மொழிகளும் நீதிகளும் இம் மனிதனைக் கலக்கு கின்றன.

தாங்க முடியாத வேதனையுடன் தத்தளித்து என்ன செய்வதென்று விழிக்கையில் ராஜன் கதையைச் சொல்லி முடித்து மேற்படி தன்னபிப்பிராயத்தையும் கூறியதைக் கேட்ட உடனே அவரால் தன்னுள்ளத்தில் பொங்கி எழும் புத்திர வாஞ்சையும் தான் இதுகாறும் செய்துவந்த கொடுமையின் உணர்ச்சியும் தடுக்க முடியாது பொங்கிவிட்டன. முகத்தின் மாறுதலை மறைக்கவே முடியவில்லை.

அவர் ஜெயில் என்பதையும், தன் உத்யோகத்தின் பெருமையையும், உடனிருக்கும் பெரிய மனிதர்களின் நினைவையும் மறந்து "என்னப்பனே! ராஜசேகரா! நான் மகா பாவி. நான் கொடிய சண்டாளன். எனக்குக் கண்ணிருந்தும் கபோதியாகி விட்டேன். தனமிருந்தும் லோபியாகி தரித்திரனாகி விட்டேன். அன்பர்களே! நீங்கள் இதுகாறும் திட்டிய மகா பாவி நானே யாவேன். இத்தகைய புத்திர ரத்தினத்தைக் கடவுள் எனக்குக் கொடுத்ததானது கண்ணில்லாத கபோதிக்கு அழகிய மனைவியைக் கொடுத்தது போலாகிவிட்டது. எனது போதாக் காலத்தின் கொடுமையால் தான் என் மனைவி—இவனது தாயார்—இறந்தாள்.

இளையவள் வந்தது எனக்குப் பெரிய அனர்த்தமாகிவிட்டது. என்னுடைய அற்ப ஆசையினால் எனது அறிவையே, எனது கண்ணியத்தையே இழந்து அடிமை போலாகி விட்டேன். அதன் பலனாக என்னைப் பெற்ற தாயைச் சோறு போடாது அழ வைத்து அடித்துத் துரத்தினேன். அவள் வயிறெரிந்து துடித்துக்கொண்டு பெண் வீட்டிற்குச் சென்றாள். அங்கு மருமகனாலும் சம்மந்தியினாலும் கஷ்டப்பட்டு, அலக்ஷியம் செய்யப் பட்டுக் கடைசியில் அங்கிருந்து துரத்தப்பட்டு தெருவில் திரிந்து அலைந்து மோட்டாரில் அகப்பட்டுக்கொண்டு உயிர் துறந்தாள்.

அன்பர்களே! எனது தாயார் அங்ஙனம் இறந்த செய்தியைக் கேட்டுப் பதறித் துடித்து மனம் நொந்தேன். ச்மசான

வைராக்யம் என்பது பேரலத் தவித்து ஏங்கினேன். இறந்த தாயாரை எங்ஙனம் இனி காண்பேன்? இச் சம்பவம் நடந்து ஒரு வருடந் தானுகிறது. சகோதரியை சரியாகக் கவனிக்காமல் அவளுடைய கோபத்திற்கும் பாத்திரமாகி விட்டேன். எனது சொந்த மகனிடமும் இவ்விதமானேன்.

இப்போதுதான் என் புத்தி சிறிது திருந்திக்கொண்டு வருகிறது. நான் மதி இழந்ததை முற்றிலும் உணர்ந்தும் மீள முடியாது மடையனுக இரு தலைக் கொள்ளி எறும்பு போலத் தவித்து வருகிறேன். என்னை உலகமே எப்படி நிந்திக்கிறது, என்னுடைய மதிப்பு எப்படி இருக்கிறது என்பதை இப்போது இன்னும் நன்ருக வெட்ட வெளிச்சமாக அறிந்துகொண்டேன். கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போலாய் விட்டது.

என்னப்பனே! ராஜசேகரா! என்னுடைய குற்றமெல்லாம் மன்னித்து விடு. என் மடமையின் விபரீதத்தை மறந்துவிடு. என் இளைய மனைவியின் போதனையினுலும் அவளுடைய சகோதரனின் தீய உபதேசத்தாலும் கொடிய பாவியிலும் பாவியாகி விட்டேன். மதி இழந்தேன். மதிப்பிழந்தேன். அன்பின் மாண்பைத் துறந்தேன். அனைத்தையும் இழந்து கடைசியில் என்னையே நான் எண்ணி நோகும்படியான நிலைமையி லாகிவிட்டேன். இத்தனைக்குங் காரணம் எனக்கிருந்த சிற்றின்பப் பித்தும், மன உறுதி யில்லாமையும், சுயபுத்தி யில்லாமையும்தான். இனி எதை எண்ணி என்ன பயன்!

என்னருமை ராஜா! நீ கைதி யாகிவிட்டாய் என்றதைப் பத்திரிகையில் கண்டதும் உன்னையே விழுங்கி விடலாமா, கொலை செய்து விடலாமா என்று நான் நினைத்து வெறுத்தேன். பிறகு தெய்வச் செயல் எப்படி இருக்கிறது பாரு. இத்தனை அலங்கோலத்திற்கும் உள்ளிருந்தபடியே வேலை செய்த க்ஷயரோகம் போன்ற வியாதி எனது இளைய மனைவியும் அவள் சகோதரனும் தான் என்பதை நேற்றே நான் தெரிந்துகொண்டேன்.

அந்தப் பாவியின் மாய மோகத்தி லீடுபட்டு அதொன்றையே

கவனித்தேனே யல்லாது அவளுடைய செய்கையை நான் சற்றும் காணவே இல்லை. குழந்தைகளுக்கும் அவளுக்கும் தினம் நகைகளும் பட்டாடைகளும் வளர்ந்துகொண்டே இருந்தன. அவைகளை நான் அதிகமாகக் கவனிக்கவில்லை என்றாலும் எப்போதாவது கேட்டபோது, தான் குடும்பத்தில் நெருக்கிச் செய்துகொண்டதாயும் தாயார் வீட்டில் கொடுத்ததாயும் சகோதரன் கொடுத்ததாயும் சமயோசிதமாகக் கூறிக்கொண்டு வந்தாள்.

அவைகளை உண்மை என்றே நம்பிவிட்டேன். நேற்று அந்தப் பாவியும் சகோதரனும் ஏதோ பேசிக் கொண்டார்கள். சிறிது மனஸ்தாபமும் இருப்பதாகத் தெரிந்தது. வெகு காலத்திற்கு முன் மறைந்துவிட்ட உன் தாயார் முன் தின இரவு கனவில் தோன்றி என்னை ஏசிப் பேசிப் பழித்து என் மடமையை குத்திக் காட்டினாள். திடீரென்று விழித்துக் கொண்டேன். அது முதல் தூக்கம் பிடிக்காது மனங் கலங்கியது. பழங் கதைகளை எண்ணி எண்ணிப் புண்ணானேன்.

182979

பெற்ற வாஞ்சையையும் மறந்து உன் தாயாரிடம் ஆதியில் காட்டிய அன்பையும் மறந்து தூர்த்தனாகி விட்டேனே என்று கலங்கினேன். அந்த விஷயமே என் மனத்தில் வேலை செய்து கொண்டிருந்ததால் ஒரு மாதிரி யாகிவிட்டேன். என்னையே நான் வெறுத்தேன். அன் னிலைமையி லிருக்கையில்தான் இவர்கள் பேசுவது அகஸ்மாத்தாக என் காதில் பட்டது.

அந்தோ! நான் அந்த விஷயங்கள் பூராவும் ஒட்டுக் கேட்டு வயிறெரிந்தேன். வீராவேசங் கொண்டேன். உன்னை அடியோடு துலைத்துவிட்டால் என் சொத்துக்கள் பூராவும் அவளுக்கே சேர்ந்துவிடும் என்கிற பேராசையினால் அவளுடைய சகோதரனைத் தூண்டி உன்னை எந்த வழியிலாவது அமுக்கி விடவேண்டு மென்று பாடுபட்டதையும், அவள் அடிக்கடி செய்துகொண்ட நகைகள் புடவைகள் எல்லாம் மோசமான திருட்டுப் பொருள் என்றும் உன்னை வேண்டுமென்றே இதில் சம்மந்தப்படுத்தி அக்காவுக்கும் நன்மை செய்ததாகக் காட்டித் தானும், நீ யாரையோ காதலித்திருக்கிறாயாமே

அந்தப் பெண்ணை மணந்து கொள்ளலாம் என்றும் இப்படி சதி செய்ததாக அந்தப் பாவி வாயினலேயே கூறக் கேட்டேன்.

மனம் பற்றி எரிந்தது. இதயம் வெடித்துவிடும் போலாயிற்று. என்னல் தாங்க முடியாத வேதனை யுண்டாகியது. என்னையே நான் மறந்து ஆவேசங் கொண்டேன். முன்பின் யோசிக்காமல் அந்தப் பாவியைப் போலீஸாரிடம் காட்டிக் கொடுத்து விடுவதென்று தீர்மானித்துவிட்டேன். என் வீட்டுக்கு எதிர் வீட்டில் போலீஸ் இன்ஸ்பெக்டர் இருக்கிருர். அவரை யழைத்துக் காட்டிக்கொடுத்தும்விட்டேன். ஏன் அப்படிச் செய்தேன் என்றால் இந்தப் பாவி செய்துள்ள காரியத்தில் என் மனைவியும் உடந்தையா யிருப்பதால் இவளை எப்படியும் கண்டுபிடித்து தண்டிக்கையில் உள்ளிருக்கும் ஊழல்கள் வெட்டவெளிச்ச மாகிவிடும். அப்போது உத்யோகஸ்தன் என்று மார்பு தட்டும் என்னையும் இதில் இழுப்பார்கள். விஷயம் மிகவும் விகாரமாகி பரிகவிக்கக் கூடியதாகிவிடும். ஆதலால் நானே காட்டிக்கொடுத்துவிட்டு நன்மையோ தீமையோ அனுபவிப்பதென்று துணிந்துவிட்டேன்.

உடனே இன்ஸ்பெக்டர் அவனை அனுமானத்தின்பேரில் கைதியாக்கி இருக்கிருர். என் மனம் பறந்தது. உன்னைப் பார்க்கத் தவித்தது. உன்னை திடீரென்று வந்து பார்க்க அனுமதிப்பார்களோ, மாட்டார்களோவென்று இந்த வெங்கிடசாமி செட்டியாரைப் பிடித்தேன். நீ என் மகன் என்பது அவருக்குத் தெரியாமலேயே வந்து பார்த்துப் பிறகு விஷயத்தை விளக்கவிருந்தேன். என் ராஜா! உன்னை எனக்கு வேம்புபோலாக்கிய அவளே இப்போது மாறி வேம்பாகிவிட்டாள். நீயே கரும்பின் சுவைபோலாகி விட்டாய். உலகம் கொண்டாடும் உனக்கோர் களங்கத்தைச் செய்த பாவி எப்படியாவது போகட்டும் என்று துணிந்தேன். அவர்களின் வஞ்சனை அவர்களுக்கே நஞ்சாகிவிட்டது. நீ கவலைப்படாதே! நான் அயோக்யனுகவிருந்தேன். ஆனல் இனி இல்லை.'' என்று மூச்சுகூட விடாமல் சரமாரியாகக் கூறுவதைக் கேட்ட எல்லோருக்கும் உண்டாகிய அபாரமான ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை.

ராஜனின் பிதா பின்னும் ஆத்திரத்துடன் "என்னுருயிர் ராஜா! இத்தனை ஆத்திரம் எனக்குப் பிறப்பதற்கு இன்னொரு முக்கிய காரணமும் உண்டு. அதாவது, இந்த வழக்கில் அனுவசியமாகச் சம்மந்தப்படுத்தப்பட்டிருக்கும் கோதண்டத்தின் வீட்டாரும் நீயும் துப்புறியும் நாயுடுவை வைத்து அவரால் எப்படியும் ஜெயமடைந்து விடுவீர்கள் என்றும் தனக்கும் தன் கூட்டத்திற்கும் ஹானி வரும் என்றும் பயந்து எப்படியோ சூழ்ச்சி செய்து நாயுடுவையும் நாயுடுவின் வளர்ப்புப் புதல்வி, மற்றொருவன் ஆக மூவரையும் தீயில் போட்டுப் பொசுக்கி விட்டானும்.

இதை அவன் எத்தனையோ பெருமையாகக் கூறி நகைத்தான். என்னுள்ளம் துடித்தது. "ஐயோ! சண்டாளன் அந்த மகானுபாவனையுமா துலைத்துவிட்டான். இனி இந்த வழக்கில் ச்ரத்தை காட்டி உன்னை விடுதலை செய்வாருமில்லையே! நாமே நடந்த சகலத்தையும் உடனே தெரிவித்துவிடுவோம் என்று ஆத்திரம் உண்டாகியதால் நான் இப்படிச் செய்தேன்'' என்றார்.

இதைக் கேட்ட விசிட்டர்கள், ஜெயிலர், ராஜன் எல்லோரும் ஏக காலத்தில் "ஹா! என்ன! என்ன! நாயுடுவையா...துப்பறியும் நிபுணரையா...நெருப்பில் போட்டுப் பொசுக்கிவிட்டார்கள். என்ன அனியாயம். என்ன அனியாயம்! என்ன அக்கிரமம்!'' என்று தீயை மிதித்தவர்கள்போலத் துள்ளி குதித்தார்கள். எல்லோருடைய ரத்தமும் கொதிப்பெடுத்துக்கொண்டது. விபரீத உணர்ச்சியால் தாக்கப்பட்டுக் கலங்கிவிட்டார்கள்.

## 26-வது அதிகாரம்

### அட்டகாஸக் கூட்டத்திற்கு இரட்டை நாமம்

உலகத்தில் மக்கள் ஏமாந்து போவது வெகு சுலபம்; தப்பித்துக்கொண்டு ஜெயித்து விடுவதும் வெகு சுலபந்தான். அவரவர்களின் புத்தி விசாலத்தையும், கால வேளையின் பலத்தையும் பொருத்திருக்கிறது. எத்தனை சூரத்தனமாக விருப்பினும் ஒரு அல்ப வினடியில் அகப்பட்டுக்கொண்டு தவிக்க நேருகின்றது. பிறகு அதிர்ஷ்டமில்லை என்பது. விதி விதி என்றும், கால வேளை என்றும் கடைசியில் கூறுவதுதான் ம்க்களின் வழக்கமான இயல்பாகிவிட்டது.

நம்முடைய கதையில் ஒவ்வொருவரும் தாம் தாம் செய்த காரியத்தைத் தாம் ஜெயித்துவிட்டதாகவே நினைத்து மகிழ்ச்சியை அடைகிறார்கள். அகப்பட்டுக்கொண்ட ஒவ்வொருவரும் "ஐயோ! இனி நாம் தப்புவதெப்படி?" என்று மனங் கலங்குகின்றார்கள். எல்லாவற்றிற்கும் முடிவு என்னவோ எல்லாம் வல்ல இறைவனின் கையிலிருக்கிறது என்பதை யாரும் நினைப்பதில்லை.

வீராதி வீரராகிய நாயுடுவைப் பிடித்து விட்டதோடு நில்லாமல் அவரை பரலோகத்திற்கும் அனுப்பிவிட்ட பெருமை இவர்களுக்குப் பிடி படவில்லை: கூத்தாடுகிறார்கள். துள்ளி விழுகிறார்கள். ஓலை நாற்புறமும் நன்றாகப் பற்றி கலந்து எரிய வாரம்பித்த பிறகு வெகு சந்தோஷத்துடன் அவ்விடம் விட்டுச் சென்றுவிட்டார்கள்.

அம்புஜாவை மட்டும் தனித்துத் தூக்கிக்கொண்டு வேறொரு இடத்திற்குச் சென்று அவளை ஓரறையில் போட்டுப் பூட்டிவிட்டார்கள். நாயுடுவைத் தீயின் மத்தியில் போட்டுவிட்டது அம்புஜத்திற்குத் தெரியாது. ஆனால் ஏதோ பெரிய ஆபத்திற் குள்ளாக்குவ

தற்கு இம்மாதிரி செய்திருக்கிறார்கள் என்று மட்டும் தெரிந்து கொண்டாள்.

மீன் குட்டிக்கு எந்த குளத்தில்,எந்த கிணற்றில்,எந்த தண்ணீரில் இருந்தாலும் அது சகஜ மல்லவா? அதன் வேலையை அது செய்துகொண்டுதானே இருக்கும். அது போன்று அம்புஜத்திற்கு இம்மாதிரி உள்ளே போட்டுப் பூட்டிவிடுவதும்,வேறு விதமாக ஆபத்தில் சிக்க வைப்பதும், எத்தனையோ தரம் பட்டுத் தேறிய அனுபவமாகும். ஆகையினால் அவள் சற்றும் கலங்கவே இல்லை.

அவளைப் பூட்டி இருந்த இடத்தில் அவளைத் தவிர வேறு ஒரு விதமான துரும்பு கூட காணப்படவில்லை. இரவோ நல்ல நடுநிசிக் கால மாகையினால் எங்கும் நிச்சப்தமும் இருளும் குடி கொண்டிருந்ததால் வெளித் தோற்றம் ஒன்றும் கண்டுகொள்ளவே முடியவில்லை. பொழுது விடியட்டும். என்ன நடக்கிறது பார்க்கலாம் என்று நினைத்து அவ்வறையிலேயே சுற்றி வந்தாள். தூக்கம் பிடிக்கவில்லை.

ஒரு புறமாக உட்கார்ந்தாள். சிறிய விளக்கு மட்டும் மினுக்கு மினுக்கு என்று எரிந்து .கொண்டிருந்தது. சிறிது நேரத்திற் கெல்லாம் கர கர வென்று ஓசை கேட்டது. அது என்ன வென்று அவ் விளக்கைப் பொருத்திக் கொண்டாள். பன்றிக் குட்டி போல பெருச்சாளி யொன்று ஓடி வளைக்குள் புகுந்து கொண்டது. அது எங்கு வளை செய்கிறதென்று பார்த்ததில் ஒரு மூலையில் மண்ணை அறுத்துக் குவித்திருக்கிறது. இன்னமும் அறுக்கின்றது.

சுவரில் தைரியமாகக் கையை விட்டுப் பார்த்தாள். கை தாராளமாக உள்ளே வெகு தூரம் சென்று வெட்ட வெளியாக நின்று விட்டது. உடனே அந்த பெருச்சாளிக்கு மேல் இவளே பெருச்சாளி போன்று அந்த வளைக்குள் கையை விட்டு மண்ணை வாரி வாரித் தள்ளியதோடு பக்கங்களிலுள்ள கல்லுகளையும் ஒவ்வொன்றாக ஆட்டி ஆட்டி இழுத்து கள்ளன் கன்னம் வைப்பது போல வைத்துத் தள்ளினாள்.

இதன் பின்புறம் யாராவது கவனித்துவிடப் போகிறுர்களே என்ற பயம் ஒரு புறம் இருக்கிறது. இருப்பினும் தைரியத்தையும் முயற்சியையும் விடாது சுமார் ஒரு மணி நேரம் வேலை செய்ததில் சுவற்றில் பெரிய த்வாரம் உண்டாகிவிட்டது. அம்புஜம் கடவுளை எண்ணிப் பிரார்த்தித்தவாறு மெல்ல அந்த வழியில் புகுந்து கவிழ்ந்து மாரால் இழுத்து நகர்ந்தபடியே வெளியில் தலையை நீட்டி எட்டிப் பார்த்தாள்.

எங்கும் இருள் மயமா யிருந்தது. சுவர்ப் பக்கவாட்டுகள் தேகத்தில் காயத்தை உண்டாக்குகின்றன. அவைகளையும் சகித்துக் கொண்டு மெல்ல நகர்ந்து தேகம் வலிக்க, வேர்த்து விருவிருக்கத் திணறியவாறு மெல்ல அந்த வழியைத் தாண்டி அப்புறம் நகர்ந்து விட்டாள். சுவரிலிருந்து இறங்கிப் பார்த்ததும் அது வெறும் புறக் கடையைப் போல செடியும் மரமும் நிறைந்து இருக்கக் கண்டாள். பெருச்சாளியின் உதவியால்தான் தப்பித்துக்கொண்டது பற்றி மிக சந்தோஷப்பட்டுப் பெருச்சாளியை வாழ்த்தினுள்.

இனி இவ் விடத்தில் நிற்கக்கூடா தென்கிற பயத்துடன் அவ் விடத்தை யொரு தடவை சுற்றிப் பார்த்துக் கவனித்துக்கொண் டாள். இந்த வீட்டின் உள்ளே சென்று யார் யார் இருக்கிறுர்கள் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாகியது. உடனே மெல்ல கொஞ்ச தூரம் சென்றுள். அந்த வீடு ஒரு பாழும் சத்திர மென் றும், இதில் யாரும் தினம் வாஸம் செய்வதில்லை என்றும், அவ்விடத் தின் அமைப்பைக் கண்டு தெரிந்துகொண்டாள்.

சத்திரத்தின் முன்புறத்தில் வந்து உள்ளே செல்கையில் வாசல் நடையில் ஒரு காவல் கிழவன் படுத்திருந்தான். அவனைத் தாண்டிக்கொண்டு உள்ளே முற்றும் ஒரு சுற்று சுற்றிப் பார்த்தாள். ஒருவிதமான சந்தடியுமில்லை. ஆட்களுமில்லை. என்ன செய்யலா மென்று பார்த்தாள். சடக்கென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே ஒரு கடிதமெழுதி மடித்தாள். அதை உறையிலிட்டுப் பின் அந்தக் கிழவனை எழுப்பினுள். "என்ன தாதா! தூங்கிறயே

என்ன செய்தி. எஜமான் உனக்கு இட்ட உத்திரவு இதுதானு?'' என்று அதட்டினுர்ப் போலக் கேட்டாள்.

தூங்கிக் கொண்டிருந்த கிழவன் திடுக்கிட்டு எழுந்து "என்ன! என்ன!...உள்ளேந்து அம்மா...என்று வாயெடுத்தான். உடனே நிறுத்திவிட்டு அந்த அறை யருகில் சென்று பார்த்தான். பூட்டு பூட்டிய படியே இருந்ததால் சிறிது தெளிந்தவனுய் "நீ யாரு?'' என்று கேட்டான்.

அம்புஜம் நகைத்துக்கொண்டே "நான் உன் எஜமானியம்மாள் தான். உள்ளே இருக்கற அம்மாள் குறட்டை விட்டுத் தூங்குகி ருள். பயப்படாதே! உன் எஜமானர் இங்கிருப்பதாகக் கேள்விப் பட்டு அவரைப் பார்க்க வந்தேன். இங்கு காணவில்லை. இந்த கடி தத்தை அவர் வந்த உடனே கொடுத்து விடு. ஞாபகமாகக் கொடு.... உள்ளே இருக்கும் அம்மாளே விட்டுவிடாதே! உஷாராகக் கவனித் துக்கொள்ளு'' என்று கூறிக் கடிதத்தை அவனிடமே கொடுத்துவிட்டு உஷார் உஷார் என்று பல தரம் எச்சரித்துவிட்டு உடனே கம்பீர மாக நடந்துவிட்டாள்.

காவல்கார கிழவனுக்கு ஒன்றும் புரியவில்லை. கடிதத்தை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு மீண்டும் படுத்துவிட்டான். அப் போது பொழுது விடியும் சமயமாகிவிட்டது. அங்கிருந்து சென்ற அம்புஜம் வழியிலிருந்த குளத்தில் தேகத்தில் பட்ட காயங்களே அலம்பிக்கொண்டு, பல் தேய்த்து, முகங் கழுவிப் பிறகு தன்னுடை யையே மாற்றி வேறு விதமாக உடுத்திக்கொண்டு மடியிலிருந்த குங் குமத்தை முகம் முற்றும் பொட்டு வைத்து அம்மைக்காரி போல வேஷமணிந்து வேப்பிலேயை உடைத்து கழுத்தில் மடியில் முற்றி லும் கொத்துக் கொத்தாகக் கட்டிக்கொண்டு இரு கையிலும் வேப் பிலேக் கொத்துடன் நடக்க வாரம்பித்தாள்.

அடி கும்பத்து மாரியடி நீ குவலயத்து அலங்காரி.
அடி தேசத்து மாரியடி நீ தெருவில் அலங்காரி.

என்று மாரியம்மன் பாடலேப் பாடிக்கொண்டே சென்ருள். உதய

மாகிவிட்டது. கிழவன் எழுந்து தன் காலைக் கடனை முடித்துக் கொண்டு அந்த அறையின் கதவினடியிலேயே உட்கார்ந்திருக்கிறான். அச்சமயம் அட்டகாஸமாக சிலர் பெருத்த ஆரவாரத்துடன் அங்கு வந்தார்கள். கிழவன் வெகு ஜாக்ரதையாகக் கதவருகிலேயே இருப் பதைக் கண்டு சந்தோஷ மடைந்து,'கிழவனைப் புகழ்ந்து பேசிய படியே கதவைத் திறந்துகொண்டு "ஓ! துப்பறியும் வீரப் பெண் சிங்கமே! தீர மாதரசியே! இரவு சொஸ்தமாகத் தூங்கினாயா?!''என்று கேட்டுக்கொண்டே உள்ளே சென்றார்கள்.

ஒருவர் மீதொருவராக விழுந்தடித்துக்கொண்டு சென்று பார்க்கையில் அந்த அறையில் ஆளையே காணாமல் காலியா யிருப் பது கண்டு திடுக்கிட்டார்கள். அறை முற்றும் சுற்றி யலைந்தார்கள். எங்கும் அம்புஜத்தைக் காணவில்லை. "இதென்ன ஆச்சரியம்! அறை பூட்டியபடியே இருக்கிறதே! அவள் எப்படி மாயமாய்ப் போயிருக்கக்கூடும். கிழவன்தான் ஏதோ மோசம் செய்திருக்க வேண்டுமென்று கிழவனை வளைத்துக்கொண்டு உதைத்தும் மிரட்டி யும் கேட்க வாரம்பித்தார்கள்.

கிழவன் "ஐயோ!யப்பா!''என்று அலறியபடியே 'சாமி!எனக்கு ஒன்னும் தெரியாது. ஒங்க எஜமானியம்மா கூட வந்து பர்த்தாங்க. நான் வாசப்படியண்டைதான் காவல் இருந்தேன். இதோ இந்த கடிதத்தை உங்க கையில் கொடுக்கச் சொன்னாங்க. இந்தாங்க'' என்று கடிதத்தைக் கொடுத்தான். கூட்டத்தில் ஒருவன் கடிதத்தை வாங்கிப் படிக்க வாரம்பித்தான்.

''முட்டாள் கூட்டமே! மடப்புத்திமான்களே! மூட சிகா மணிகளே !

காற்றையும் நெருப்பையும் பிடித்துக் கட்டிவிட யாராலா வது முடியுமா! அப்படிப்போல மகா வீர சூர பராக்ரமசாலி யான நாயுடுவையும் அவர் கூட்டத்தையும் பிடித்துவிட உங்க ளாலல்ல உங்கள் முப்பாட்டனாலும் முடியாது. இதுபோல ஆயிரம் கூட்டில் அடைபட்டதுண்டு. ஆயிரம் கூட்டிலிருந்து

பறந்ததும் உண்டு. ஏமார்ந்த சோணகிரிகளே! இன்னும் கூடிய சீக்கிரத்தில் உங்கள் வண்டவாளம் தெரியும். பதறு தீர்கள். என் பிதாவைப்பற்றி எனக்குக் கவலேயே இல்லே. அவரும் ஒரு வகையில் தப்பித்துக்கொண்டு உங்கள் கண்ணில் மண்ணைத் தூவி இருப்பாரென்று திடமாக நம்புங்கள்.

இங்ஙனம்
உங்களே ஏமாற்றிய
அம்புஜம்."

இதைப் படித்ததும் காவல்காரன் மீதிருந்த கோபம் பன் மடங்கு அதிகரித்தது. அவனே முன்பின் பாராது அடித்து இம்சை செய்கிறார்கள். இதற்குள் சிலர் பெருச்சாளிப் பாழியையும், அங்கு பெரிதாகத் தொளே செய்து கன்னம் வைத்ததுபோலப் பெயர்த்தி ருப்பதையும் பார்த்து "இதோ! இதோ! அந்த மாயாவியின் சாமர்த் தியத்தைப் பாரு. இவ் வழியே தப்பித்துக்கொண்டு கிழவனேயே ஏமாற்றிக் கடிதமும் கொடுத்துச் சென்றிருக்கிறாள். ஹா! கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லேயே!" என்று தவித்து, இஞ்சி தின்ற குரங்கு போல விழித்தார்கள்.

அவர்களில் ஒருவன் "அடேய்! இப்போ நினைவுக்கு வரு கிறது. நாம் வரும்பொழுது எதிரே ஒரு அம்மைக்காரி போனுளே: அவள் புடவையைப் பார்த்தால் நேற்று அம்புஜம் கட்டி இருந்த புடவை போல இருந்தது. ஆனுல் நாம் கவனிக்காமல் வந்துவிட் டோம். அவள்தான் அந்த வேஷத்துடன் போகிறுளோ என்னவோ தெரியவில்லேயே:......இனி தாமதிக்கலாகாது. உடனே சென்று அவளேப் பிடிக்கவேண்டும். நாயுடுவைக் காணச் சென்றவர்கள் என்ன வானுர்கள் பார்க்கலாம். இந்த ஒரு பெண் பிள்ளேயே நம்மை ஏமாற்றி இருக்கையில் அந்தப் புலி என்ன செய்துவிட் டதோ தெரியவில்லேயே!" என்று வியப்பும், அவமானமும் அடைந்து ஓட்டமாக அவ்விடம் விட்டுச் சென்றுர்கள்.

இதற்குள் எதிரில் ஒரு கூட்டம் "இதென்ன அனியாயம்! நெருப்புக்குத் தப்பித்துக்கொண்டு எப்படி அந்த மனிதன் பிழைத்து

விட்டான். பிணத்தை...இல்லை. வெந்து போயிருப்பான். இதும் பைத்தான் நாம் பொறுக்க வேண்டி இருக்கும் என்று நினைத்ததெல்லாம் வீணுகி விட்டதே: ஆசாமியே காணவில்லை. அவன் தப்பித்துக் கொண்டிருக்கும் அழகு எத்தனை யோசனையாயும் புத்திசாலித்தனமாயும் இருக்கிறது பார்...என்று கூறிக்கொண்டே வந்தார்கள்.

எதிரே சென்றவர்கள் "என்ன! என்ன! நாயுடுவா தப்பித்துக் கொண்டான். என்ன அதிசயம்! அங்கு அம்புஜமும் நமக்குக் கடுக்காய் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டாள்...(அம்புஜம் தப்பிய விவரத்தைக் கூறிவிட்டு) நாயுடு எப்படி தப்பினுன்" என்று கேட்டார்கள்.

எதிர்க் கூட்டத்தில் ஒருவன் 'அடாடா! ஒன்றைப் பார்க்க ஒன்று பெரிய வேடிக்கையாக இருக்கிறதே! இதென்ன ஆச்சரியம்! நாயுடு தப்பிய விதம் வியப்பிலும் வியப்பு. நாம் சுற்றிலும் ஓலையைக் கட்டிவிட்டு நெருப்பு வைத்துவிட்டு வந்துவிட்டோமல்லவா? இன்று காலையில் போய்ப் பார்க்கையில் ஓலைகள் முற்றும் எரிந்து சாம்பலாகிக் கிடந்தன. அதற்கு முன்னுலேயே ஒரு கொம்பு புதிதாக நட்டு அதில் ஒரு துணியைத் தலைப்பாகை போலச் சுற்றி வைத்திருந்தது.

அதைப் பார்க்கும்போதே பெருத்த வியப்புடன் அந்தத் துணியை எடுத்தோம். அதிலிருந்து ஒரு கடிதம் தொப்பென விழுந்தது. எங்களுடைய சந்தேகமும் ஆச்சரியமும் அதிகமாயிற்று. உடனே அதைப் பிரித்துப் பார்த்தால் நாயுடுவின் லெட்டர் பேப்பரில் நாயுடுவே எழுதி இருந்தான். என்னைத் தூக்கி வாரிப் போட்டது. கடிதத்தைப் படிப்பதற்குள்ளேயே சிலர் எரிந்த ஓலைகளைக் கிளறிப் பார்த்துவிட்டு "மோசம்! மோசம்!...நாயுடு தப்பித்துக் கொண்டு போய்விட்டான். இதோ உள்ளே வந்து பாருங்கள்." என்று கத்தினுர்கள்.

எல்லோரும் ஒட்டமாக உள்ளே சென்று பார்க்கையில் ஆளைக் காணவில்லை. ஆனல் தண்ணீர் மட்டும் வெகு பள்ளத்தில் தேக்கி இருந்தது. எங்களுக்கு விஷயம் புரியவில்லை. இங்கு எப்படி திடீ

ரென்று இவ்வளவு தண்ணீர் வந்தது...பள்ள மேது என்று திகைத்தோம். உடனே கடிதத்தைப் படிக்க வாரம்பித்தோம்.

"களிமண் மூளை கனவான்களே! மதியில்லா மண்டூகங்களே !

யார் ஜெயித்தார்கள், யார் தோற்றூர்கள் தெரிந்ததா? சத்தியத்திற்கும் உண்மைக்கும் என்றும் அழிவில்லே. களவும், பித்தலாட்டமும், மோசமும் முடிவில் இப்படித்தாளுகும் என்பதையறியுங்கள். எங்களே ஏதோ பெரிய சாமர்த்தியமாகப் பிடித்துவிட்டதாகத் துள்ளுகிறீர்களே! அந்தத் திமிர் வேண்டாம். எங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டி உங்களே ஏமாற்றவும் புத்தி வரும்படிச் செய்யும்பொருட்டும் நாங்களே உங்களிடம் அகப்பட்டதாக நடித்து தப்பித்துக்கொண்ட வழியையும் காட்டிவிட்டோம். என் மகளேப் பற்றி எனக்குக் கவலே இல்லே. அவள் மாயாவி. கட்டாயம் உங்கள் கண்களில் மிளகாய்ப் பொடியையே தூவி தப்பித்துக்கொள்வாள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

மூடச் சிகாமணிகளே ! இதற்கும் கடுமையாக எங்களேச் செய்தாலும் நாங்கள் தப்பித்துக்கொள்ளும் திறம் படைத்தவர்கள் என்பதை உணருங்கள். சகலமான சுக துக்கங்களேயும் சகித்துக்கொள்ளும் பூமாதேவி எங்களேக் காக்கும் உபாயத்தைக் காட்டி இட மளிக்கமாட்டாளா?

அற்ப புத்தி படைத்த அதமர்களே! நான் எப்படித் தப்பினேன் என்று வியப்புறலாம். அதை விவரமாகவே கூறுகிறேன் கேளுங்கள். இரும்புச் சங்கிலியால் பிணேத்துக் கட்டிவிட்டீர்களே! அதையா அறுத்தெறிய என்னலாகாது. கூரிய ஈட்டிக்கும் மேலான என் பல்லால் ஒரு வளேயத்தை மெல்ல கடித்துக் கடித்து நீக்கினேன். கை விலங்கு கீழே விழுந்தது. என் மடியிலிருந்த ஆயுதத்தினல் எனதும் என் சிஷ்யனுடைய மற்ற சங்கிலிகளும் அறுத் தெறியப்பட்டன.

அப்போதுதான் ஓலை நன்ருக ஒன்ருேடொன்று பிடித்து எரிய வாரம்பித்தது. இத்தனை காலமாகக் காத்து ரக்ஷிக்கும் கடவுள் இன்று கைவிட்டுவிடுவர்ரா? மழை பெய்து பூமி எல்லாம் சேறும் தண்ணீருமாக இருப்பதை மூடமதியீனர்களாகிய நீங்கள் மறந்தீர்கள் போலும். நானும் என் சிஷ்யனும் பூமாதேவியைப் பிரார்த்தித்து பூமியில் எரிகளில் ஊத்துப் போடுவது போல வேகமாகப் பறித்தோம்.

பூமாதேவியின் அருளால் சிரமமின்றி இரண்டடி தோண்டும்போதே தண்ணீர் வர வாரம்பித்தது. அதை வாரி நாலா புறத்திலும் எரியும் ஓலையில் இரைத்துக்கொண்டே பின்னும் அதை விடாது பறித்தோம். சுமார் 5 அடிக்கு மேல் தோண்டிஞேம். தண்ணீரும் ஏராளமாகக் கிடைத்தது. வாரி இரைத்து ஒரு பக்கத்து ஓலையை நன்ருக இழுத்து அணைத்துவிட்டோம். இதற்குள் நீங்களெல்லோரும் நான் இறந்துவிட்டதாக எண்ணி நாளை சஞ்சயனம் செய்ய (பால் வார்க்க) வரலாம் என்று ஆத்திரத்துடன் சென்றுவிட்டீர்கள். தேகத்தில் சிறிது வெப்பமும் படாமல் தப்பித்துக் கொண்டோம்.

மூடாத்மாக்களே! என்னையும் என் சிஷ்யர்களையும் கொன்று விடவேண்டும் என்கிற ஒரே மூடத்தனத்தைக் கொண்டு நீங்கள் இக் காரியம் செய்தீர்களே யல்லாது யோசனை என்பது இருந்ததா? "வரண்டுப் போயுள்ள ஆற்றில் இந்தக் காரியம் செய்கிருேமே: மழை வேறு பெய்திருக்கிறதே! தண்ணீர்|ஊற்று உண்டாகிவிடுமே!" என்ற எண்ணம் சிறிதும் இல்லாது செய்தீர்கள். உம்...வினை விதைத்தவன் வினைதான் அறுப்பான். தினை விதைத்தவன் தினையையே அறுப்பான் என்பது இனியாவது தெரியட்டும்: பதருதீர்கள். தள்ளும் வஸ்து தரையில்தான் விழும். தோழர்களே! நாங்கள் சௌக்யமாயும் சந்தோஷமாயும் போய் வருகிருேம். நீங்கள் எக்கதியாகப் போகிறீர்களோ: எதிர்பாருங்கள். உங்களில் பலர் என்னுல் தண்டிக்கப்பட்டுத் தப்பித்துக்கொண்ட கைதிகள் என்பதை நான் அறிவேன். போலீசாரிடமும் தெரிவித்துவிட்டேன் என்பது

ஞாபக மிருக்கட்டும். அட்டகாஸக் கூட்டங்களே! உங்களுக்கு இரட்டை நாமம் சாத்திவிட்டோம். உஷார்.

துப்பறியும் ராஜாராம் நாயுடு.

என்றதைப் படித்ததும் விளக்கெண்ணெய் குடித்த மாதிரி முகம் மாறிவிட்டது. என்ன செய்வது? விழிக்கிறார்கள். கையைப் பிசைகிறார்கள். பல்லை நெறநெற வென்று கடிக்கிறார்கள். இன்னது செய்வதென்று தெரியவில்லை. "ஐயோ! நாம் ஏமாந்துவிட்டோமே! அப்போதே கத்தியால் ஒரே வீச்சு போட்டுத் துலைத்துவிடாது போய்விட்டோமே! அவனை கொஞ்சங் கொஞ்சமாக நெருப்பில் பொசுக்கி சித்திரவதை செய்யவேண்டும் என்று நினைத்து நெருப்பை வைத்தால் நெருப்புக்குமா அவன் மாயம் செய்துவிட்டான். என்ன ஆச்சரியம்!

அந்த சிறுக்கியை அடிமை போல நடத்திக் குப்பை வாறும் வேலை முதல் செய்வித்துக் கெடுத்து இம்சிக்க நினைத்தால் அவளும் புலிக்கு மேற்பட்ட புலியாகி விட்டாளே! சேச்சே! இதென்ன ஏமாற்றம்...அடேய்! நமது ரகவியத்தைக் கூட அவன் எப்படியோ தெரிந்துகொண்டு எழுதி இருக்கானே! இனி என்ன செய்வது? எப்படி தப்புவது. முன்னர் குற்றம் ஒன்று; தப்பித்துக்கொண்டு ஓடியது இரண்டு. இப்போது செய்து வருவது மூன்று. நாயுடுவையே பிடித்துவிட்டது நான்கு. ஆக நான்கு குற்றத்திற்கும் சேர்த்து நம்மைத் தூக்கிலிடுவார்களோ, அன்றி தீவாந்திரம் ஆயுசு பரியந்தம் அனுப்பி விடுவார்களோ தெரியவில்லையே!'' என்று தப்பியவர்களும் மற்றயோரும் பயந்து நடுங்கி நின்றார்கள்.

நாயுடு இத்தனை நேரம் எங்கு சென்றிருப்பானோ, நமக்கு என்ன தீங்கு தேடி வைத்திருப்பானோ தெரியவில்லையே! அடாடா! "நாயுடுவும் அவனது ப்ரதம சிஷ்யர்களும் எமனுலக யாத்திரை போய் விட்டார்கள்.' என்ற தலை யங்கத்துடன் எல்லாப் பத்திரிகைகளுக்கும் நேற்றிரவே எழுதி விடியற்காலம் அனுப்பிவிட்டார்களே! இப்போது என்ன செய்வது?'' என்று திகைத்து நின்றார்கள்.

நாம் இனி வெளியி லிருப்பதுவும் சரியல்ல. உடனே ஓடி விடவேண்டும். யாராவது பிடித்துக் கொண்டால் ஆபத்துதான் என்று கூறி அக் கடிதத்துடன் கிளம்பினார்கள். அதே சமயம் குதிரைகள் வருவது போல, காலடிச் சத்தம் கேட்டது கண்டு திடுக்கிட்டு மிரண்டு நாற் புறமும் சுற்றி வளைத்துப் பார்த்தார்கள்.

அப்படியே திகைத்து நின்றோர் சிலரும்,ஓடப் பார்ப்போர் சிலரும், ஓடுகிறவர்கள் சிலருமாக ஆரம்பித்தார்கள். இதற்குள் செந்தலை வீரர்கள் வெகு வேகமாகக் குதிரை மீது வந்து சேர்ந்துவிட்டார்கள். இங்கு ஓடுபவர்களையும் மற்றவர்களையும் வளைத்துக் கொண்டு முற்றுகை போட்டுவிட்டார்கள். அங்கு கூட்டத்தில் போர் வீர மாதரசி போல காம்பீரத் தோற்றத்துடன் அம்புஜா குதிரை மீது அமர்ந்து வந்தாள். மிரண்டு பயந்து நிற்கும் இந்தக் கூட்டத்தைக் கண்டதும் கடகட வென்று நகைத்துக் கொண்டே, "அட்டகாஸக் கூட்டத்திற்கு இரட்டை நாமம் சாற்றிவிட்டோம் பார்த்தீர்களா! இனியாவது உஷாராக நல்ல வழியில் செல்லுங்கள்." என்று கூறிக் குறும்பாகப் பார்த்தாள்.நாயுடுவும் அங்கு ப்ரஸன்னமாகி விட்டார். ஐயோ பாவம்! எல்லோரும் இடி யோசை கேட்ட நாகம் போல ஒடுங்கிவிட்டார்கள்.

## 27-வது அதிகாரம்

## சிக்கு விடுபட்ட பக்குவக் குடும்பம்

உலகத்தில் மக்களுக்கு துக்கத்தினாலும் விசனத்தினாலும் எப்படிக் குன்றி மெலிந்து மனம் புண்ணாகி விடுகின்றதோ, அப்படியே சுகத்தினால்,சந்தோஷத்தினால், மனம் பொங்கி உடல் பூரித்துப் புலகித மடைந்துவிடுவதும் சகஜ மல்லவா!

அதுபோல நமது அருங் குண பூஷண மணியாகிய பாரதியின் மனம் வெதும்பி மெலிந்து போய்விட்டது. அந்நிலைமையில் தனது காதலனுக்கு ஒரு கடிதமேனும் எழுதும் பாக்கியமும் சந்தர்ப்பமும் கிடைத்தது பற்றிப் பரம சந்தோஷ மடைந்தாள். அதற்கு என்ன பதில் வருமோ வென்று எதிர் பார்த்திருந்தாள். இரண்டு மூன்று நாட்கள் சென்றும் ஒரு விதமான தகவலும் தெரியாமையினுல் சிறிது கலவரம் உண்டாகியது. தான் அனுப்பிய கடிதம் சேர்ந்ததோ! சேரவில்லையோ! ஜெயிலர்கள் அதைக் கொடுத்தார்களோ கொடுக்க வில்லையோ, என்றெல்லாம் யோசனைகள் உண்டாகி விட்டன.

சூடாமணி யிடம் கூறி விசனித்தாள். இருக்கை கொள்ளாது வாடி வதங்கித் தவிக்கின்றுள். பின்னும் இரண்டு நாட்களாகி விட்டன. பேதைப் பெண் என்ன செய்வாள். தன்னருமைக் காதலனையும் தன்னுருயிர்ச் சகோதரனையும் எண்ணி எண்ணி ஏங்கிப் பாகாயுருகுகின்றுள். "என்னை யாரேனும் மந்திர சக்தியினுல் ஓர் பறவை போன்று செய்து விடக்கூடாதா! உடனே நான் பறந்து சென்று என் காதலரின் விஷயத்தையும் மாசிலாமணியின் விஷயத்தையும் அறிந்துகொண்டு வந்துவிடுவேனே!" என்று பதறுகின்றுள்.

அவ்விடத்திற் கருகில் இவ் வாசிரமத்தின் சொந்தக்காரர் வந்திருப்பதாக தலைவியின் வார்த்தை மூலம் தெரிந்தது. எப்படியாவது தான் அந்த முதலாளி யிடம் சென்று உத்திரவு பெற்றுக்கொண்டு வெளியில் சென்று விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்ற பேராவல் உண்டாகியது. அதைப்பற்றி தன் தோழி சூடாமணி யிடம் தெரிவித்தாள்.

சூடாமணியும் அது சரியான யோசனை என்று கூற இருவரும் ஆசிரம விதிப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தார்கள். மிகவும் அவசியமும் அவசரமும் சேர்ந்த சந்தர்ப்பத்தில் எஜமானரிடம் நேரில் சென்று பார்க்கலாம் என்ற ஒரு விதி இருந்தது கண்டு அளவற்ற சந்தோஷ மடைந்த பாரதி இந்த விதியின் ஆதாரத்தை தன் புதிய தலைவியிடம் காட்டிப் பிடிவாதமாக உத்திரவு பெற்றுக்

கொண்டு ஆசிரமத்து வேலைக்காரனின் துணையோடு எஜமானரின் வீட்டிற்குத் துணிபுடன் சென்றாள்.

எஜமானர் மிகவும் எளிய வாழ்க்கையுடன் சர்வ சாதாரணமாய் உட்கார்ந்து தாம்பூலந் தரித்துக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்த உடன் இவர்தானா எஜமானர் என்று நமது பாரதி திகைத்து நின்றாள். உடன் வந்த வேலைக்காரன் "அம்மா! இவர் தான் நமது எஜமானர்" என்று தெரிவித்தான்.

உடனே பாரதி அவர் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துத் தனது மனக் குறைகள் யாவையும் ஒன்று விடாது கூறி "எஜமானே! இவ் வேழைபால் இரங்கி எனக்கு ஆதரவு கொடுக்க வேண்டும். அலைகடல் துரும்பென என் மனம் தத்தளிக்கின்றது." என்று கண்ணீர் வடியக் கேட்டாள்.

இதைக் கேட்ட எஜமானருக்கு மனந் தாங்காமல் வருத்த மேற்பட்டு விட்டது. சில நிமிட நேரங்கள் வரையில் ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் விசனித்தவாறு இருந்துவிட்டார்...பிறகு பாரதியை நோக்கி, "அம்மா! உன் சரிதையைக் கேட்டு என் மனம் விசனப்படுகிறது. எனது பழங் காலக் கதைகள் என் முன்பு தாண்டவமாடுகின்றன. அப்பப்ப! எந்த விசனத்தையும் சகிப்பது கஷ்டமே! எனினும் காதல் சம்மந்தமான துயரம் சகிப்பது மகா கொடிது. ஒன்று த்யாகம், ஒன்று உயிரையே நீத்தல். இவ் விரண்டில்தான் அதன் முடிவு வந்து சேரும். நீ அறியாச் சிறுமி. உன்னிடம் நான் ஏதோ வித்யாசமான வார்த்தைகளைக் கூறுவதாக நினைக்காதே.

அம்மணீ! நான் அந்த கொடிய வியாதியை பரிபூரணமாக அனுபவித்தவன். இன்னமும் என் வஸந்தவல்லியின் பிம்பம்...... அவள் பாக்கியம் செய்த ஓர் அன்னியனின் மனையாட்டியாகிவிட்டாள்.......எனினும் என் மன வேதனை என் முடிவை எதிர் பார்க்கிறது. உம். இம்மாதிரி உலகத்தில் இன்னும் அனேகமிருப்பதை இப்போது தான் அறிகிறேன்.

[குறிப்பு:—வஸந்தவல்லி யார்...எஜமானராகிய மணியன்

யார்? என்னவிதமாகக் காதல் கொண்டார்கள். அது எப்படி பூர்த்தியாகா தொழிந்தது, என்பதை நேயர்கள் அறியவேண்டு மாயின் உடனே படாடோபத்தின் பரிபவம் அல்லது பொறு மையின் போக்கிஷம் என்ற சிறிய அருமையான நாவலை வாங்கிப் படித்து இன்புறுங்கள். அது தெவிட்டாத தீங்கனி என்பது பல்லோரின் அபிப்பிராயமாகும். விலை அணு எட்டே.]

அம்மா! உன்னைப்பற்றி நான் பரிதாபப்படுகிறேன். நீ இவ் விடத்திலேயே இரு. நான் விஷயத்தை ச்ரத்தையுடன் கவனிக்கி றேன். கவலைப்படாதே. கடவுள் உனக்கு நற்செய்தியையே கொடுப் பார் என்று திடமாக நம்புகிறேன். விசனப்படாதே! நான் ஓர் பரதேசி, ஏகாங்கி...சன்யாசி என்று தாராளமாகக் கூறலாம். உனக் குச் சம்மதமாயின் இங்கு இரு. இல்லையேல் நீ உன் ஆசிரமத்தி லேயே இரு. நான் பிறகு செய்தி யனுப்புகிறேன்.'' என்று வணக்க மாயும் அன்போடும் கூறினன்.

இதைக் கேட்ட பாரதிக்கு பறந்துவிட்ட உயிர் திரும்பப் பெற்றதுபோலான சந்தோஷம் உண்டாகியது. மணியனைப் பார்த்த உடனேயே இவளுக்கு ஏதோ பெரிய மதிப்பும் நம்பிக்கையும் உண் டாகியது. அவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதும் அவளு டைய எண்ணம் பின்னும் ஊர்ஜிதமாகிவிட்டது. உடனே அவள் மணியனை நோக்கி

“ஐயா! எனக்கு எத்தகைய கவலையும், சந்தேகமும் கிடை யாது. எந்த இடத்திலும், எந்த மனிதர்களிடத்திலும்—மனம்தான் காவலே யன்றி மதில் காவலால் பயனில்லை என்பதுதான் எனது நம்பிக்கை. ஆகையினல் நான் தங்களுடைய புதல்வி போன்று இங் கேயே இருக்கிறேன்.'' என்றாள்.

பாரதிக்கோ ஒரு நிமிடம் செல்வது ஒரு யுகம்போல விருக் கிறது. தனக்கு நல்ல செய்தி எப்போது கிடைக்குமென்று எதிர் பார்த்துக்கொண்டே இருந்தாள். களைப்பின் மிகுதியினல் தன்னை மறந்து அயர்ந்து தூங்கிவிட்டாள். திடீரென்று தூங்கி விழித்துக்

கொண்டு பார்க்கையில் தன் கண்களையே நம்பாது ப்ரமித்து மிரண்டாள்.

கண்ணைப் பல முறை கசக்கிக்கொண்டு பார்த்தாள். "கண்மணீ! என்ன சந்தேகப்படுகிறுயா! அன்றி சொப்பனமென்று நினைக்கிறுயா...என்னுராவமுதமே!.........சொப்பனமில்லை. யாவும் உண்மையே! எல்லாம் இறைவனின் செயலால் இனிது முடிந்தது...... கலவரப்படாதே'' என்று கூறிக்கொண்டே ராஜசேகரன் பாரதியைத் தழுவிக்கொண்டான்.

நல்ல தெளிவு பெற்று பாரதி நாற்புறமும் பார்த்தாள். தன் காதலன் மடிமீது தான் தலை வைத்துப் படுத்திருப்பதையும் தன் பக்கலில் மாசிலாமணி, காமு, விசாலம், கோகிலம், கோதாவரி, கோதண்டம், மங்களவல்லி......நாயுடு......அம்புஜம் ஆகியோரும் இன்னும் அனேகரும் இருப்பதைக் கண்டு தாங்கமாட்டாத பூரிப்பையடைந்தாள்.

ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து முதலில் தன் சகோதரனைத் தழுவிக்கொண்டு பேசமாட்டாது கண்ணீர் விட்டுக் கலங்கி நின்றுள். அடுத்த வினாடி ராஜசேகரனின் பாதங்களைப் பிடித்துக்கொண்டாள். மறு நிமிடமே காமுவைக் கட்டியணைத்தாள். மங்களத்திற்குப் பல முத்தங்களைக் கொடுத்தாள். மீண்டும் ராஜசேகரனைத் தாவி நின்றுள்.

இம்மாதிரி நிலை தெரியாமல் தத்துக்கிளிபோன்று தாவுகிறுளேயன்றி சந்தோஷத்தின் மிகுதியால் பேசத் தெரியவில்லை. உடனே ராஜசேகரன் பாரதியை நோக்கி, "கண்மணீ! உனது நிலைமை சற்று தெளிவு பெறட்டும். ஒரே குழப்பமாகிவிட்டாய். இதோ இந்த மகானுபாவர்தான் நமது கவலையை நீக்கிக் களிப்பை அளித்த நாயுடு காரு. இவர் அவருடைய வளர்ப்புப் புதல்வி. இவர்கள்தான் இந்தக் குழந்தையைக் காப்பாற்றிய உபகாரிகள். பாரதீ! உன் மாசிலாமணியை நன்றுகப் பார்த்தாயா! எப்படி தெளிவு பெற்று விட்டான் பாரு'' என்று கொஞ்சலாகக் கூறினுன்.

பாரதி.—என்னுருயிர் ப்ராணகாந்தா! எல்லாம் ஈசன் செயல்...

மாசிலாமணீ!...அண்ணா!...அண்ணா!...உன்னைக் காணும் பொருட்டு அல்லும் பகலுமாக நான் எவ்வளவு கதறிக் கண்ணீர் விட்டிருப்பேன் தெரியுமா!...ஏன் விசனிக்கிறாய்...கலங்காதே......அண்ணா'' என்று புலம்பினாள்.

மாசி.—என் செல்வச் சகோதரியே! எனக்கு ஒன்றுமே தெரிய வில்லை...நான் மண்டையிலடிபட்டுப் படுத்த பிறகு ராஜசேகரனைத் தோட்டத்தில் சந்தித்துப் பேசும் வரையில் இடையில் நடந்த துக்ககரமான சம்பவங்களைக் கேள்விப்பட்டு என் மனம் பட்ட பாட்டை என்னென்று கூறுவேன்? எனக்கு புத்தி தெளிவு உண்டாகிய நாள் முதல் என் ஆத்மா உன்னையே காண ஆவல்கொண்டு துடித்தது. அம்மாவையும் எண்ணி ஏங்கினேன். பிறகே விஷய மறிந்தேன்'' என்று கூறி தங்கையைத் தழுவிக்கொண்டான்.

பிரிந்தவர் கூடினால் பேசவுங் கூடுமோ என்பது போல ஆநந்த மேலீட்டால் எல்லோரும் பொங்கிவிட்டார்கள். இந்த ப்ரம்மாநந்த காட்சியைக் கண்டு சந்தோஷ சாகரத்தில் மிதப்பதுவே நாயுடுவின் தொழிலாகிவிட்டதால் அவர் ராஜசேகரனை நோக்கி "ராஜா! இந்த ஒரு நிலைமையைத்தானே நீ கோரினாய். கடவுளின் கருணையினால் அது கிடைத்துவிட்டது. இனி எனக்கு உத்திரவு கொடுப்பாயா!'' என்று வெகு குதூகலத்துடன் கேட்டார்.

இதைக் கேட்ட ராஜன் நாயுடுவின் இரு கைகளையும் பிடித்துக்கொண்டு "நாயுடுகாரு! எங்களுடைய இறந்துவிட்ட சந்தோஷங்களை மீண்டும் உயிர்ப்பித்து விட்டீர்கள். எனினும் அதற்கும் இன்னொரு சடங்கு இருக்குமல்லவா! அதையும் செய்து எங்களை இன்பகரமான இல்வாழ்க்கை விலங்கைப் போட்டு பூட்டிவிட்டுப் பிறகு விடை கொள்வதுதான் தருமமாகும். நாயுடுகாரு! இன்னமும் மனத்தில் பக்கு பக்கு என்கிறதே! இனிமேலாவது அக்கொடியோர்களால் எவ்வித துன்பமும் நேராதே! சரியானபடி முடிந்துவிட்டதல்லவா!'' என்று கேட்டார்.

நாயுடு.—ராஜசேகரா! இன்னுமா நீ பயத்துடன் கேட்கிறாய்? நான் அந்த தீ வைத்த இடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடி

வருகையில் அம்புஜமும் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு மாரி யாத்தாள் வேஷத்துடன் எதிரே வந்தாள். உடனே அவளையும் அழைத்துக்கொண்டு அருகிலிருந்த சம்பங்கிபுரியை அடைந்து சிறிது சிரமப் பரிசாரம் செய்துகொண்டு அவ்வூர் போலீஸுக்குச் சென்று சகல விவரத்தையுங் கூறி ஒரு பெரிய படையைத் திரட்டிக்கொண்டு அதே தீ வைத்த இடத்திற்குச் சென்றோம்.

ஏனெனில் நான் எரிந்து சாம்பலாகி இருப்பேன். என்னை எடுத்துப் போட்டுவிடலாம் என்று அவர்கள் கட்டாயம் வருவார்கள். வந்தால் உடனே பிடித்துக்கொள்வது என்று தீர்மானித்து அவ்விதம் செய்தோம். அதே போன்று அங்கு வந்து சேர்ந்தார்கள். எல்லோரையும் பிடித்துக்கொண்டோம், பிறகு என்ன நடக்கிறது பார்க்கலாம் என்று இரண்டு நாள் இச் செய்திகளை வெளியிடாது ரகஸியத்தில் வைத்திருந்தேன்.

நாயுடுவும் அவன் சகாக்களும் எமனுலக யாத்திரை போய் விட்டார்கள் என்ற தலையங்கத்துடன் பெரிய பெரிய பத்திரிகைகளில் இவ் விஷயங்கள் ப்ரசுரமாகிவிட்டன. இதைக் கண்ட எல்லோரும் நடுங்கினார்கள். அவரவர்களுக்குத் தோன்றியபடியே பத்திரிகைகளில் எழுத வாரம்பித்தார்கள்.

இந்த இரண்டு தின சாகவாசத்திற்குள் நான் மாசிலாமணியின் ஆஸ்பத்திரி விஷயத்தில் லஞ்சம் வாங்கியவனையும் கொடுத்தவனையும் கண்டுபிடித்துவிட்டேன். பிறகு அனாதை யாச்ரமத்தின் மானேஜருக்கு இந்த பொன்னுசாமியே லஞ்சங் கொடுத்து அந்த தலைவியை விட்டு தனக்கு வேண்டியவளை வைத்துச் சகல பெண்களையும் அகப்பட்டவரையில் ஒரு கை பார்ப்பதென்றும்,பாரதியை மட்டும் தானே மணப்பதென்றும் தீர்மானித்துச் செய்த சதியையும் கண்டுபிடித்து விட்டேன்.

ஆசிரமத்தின் எஜமானரிடம் சகல விஷயங்களையும் தெரிவித்துவிட்டேன். வீரப்பனின் வாக்கு மூலத்தினால் இன்னும் பல விஷயங்களையும் கண்டுபிடித்து அவைகளையும் போலீஸாரிடம் ஒப்பு

வித்தேன். இத்தனைக்கும் ஆதி காரண வேர்ப்புழு யார் என்றறிய ஆராய்ச்சி செய்தேன்.

காமுவின் கொலை விஷயமாக நான் ஆராய்ச்சி செய்ததில் வீராயியின் ஊருக்கே நேரில் சென்று விசாரித்தேன். அந்தக் கிழவிக்கு கொஞ்சம் நிலம் இருப்பதாயும் அந்த நிலத்தில் வந்த நெல்லை விற்று 150 ரூபாய்கள் மூன்று 50 ரூபாய் நோட்டுக்களாக கையில் எடுத்துக்கொண்டு வந்ததாக அந்த ஊர் முனிசிப்பு மூலமறிந்தேன்.

பின்னும் விசாரித்ததில் அக்கிழவியின் உறவினன் தெரிவித்ததாவது காமுவின் ரகஸியம் தெரிந்துவிட்டதென்றும் அதைத் தெரிந்துகொண்டு அங்கு சென்று அவளுடன் சமாதானம் செய்து இதை எப்படியாவது மறைத்து விடத் தானும் ஒத்தாசை செய்து அவர்களை இங்கு அழைத்துக் கொண்டு வரலாம் என்ற நல்ல எண்ணத்துடன் தான் சென்றதாயும் அதையவர்கள் அறிந்து கொள்ளாது கொலை செய்துவிட்டு நோட்டையும் களவாடிக்கொண்டு போய்விட்டதாயும் தெரிவித்தான்.

அந்த நோட்டின் நம்பர் யாருக்காவது தெரியுமாவென்று விசாரித்ததில் மணியக்காரருக்குக் தெரியும் என்று நம்பரைத் தெரிந்துவந்து சொன்னன். உடனே மேற்கொண்டு ஆராய்ச்சி செய்ததில் அன்றிரவு 10 மணி சுமாருக்கு பொன்னுசாமி காமுவின் வீட்டிற்கு வருவதாக ஒரு கடிதம் எழுதி இருந்ததை அவன் தபாலுக்குப் போட்டதாக எண்ணிப் போடாமல் மறந்து விட்டான்.

நான் மாறு வேடத்துடன் சென்று அவன் விடுதியை சோதனை போட்டதில் அது கிடைத்தது. அவன் கடிதத்தை யாரிடமாவது அனுப்பி அவர்கள் மறந்துவிட்டார்களோ என்று எண்ணி கடிதத்தை நான் எடுத்து வைத்துக்கொண்டேன். அவன் கடிதத்தை அனுப்பிவிட்டதாக எண்ணி அங்கு சென்றிருக்கிறான். அங்கு யாருமில்லாது கிழவி மட்டும் விழுந்து கிடப்பதைக் கண்டு அவளிடம் ஏதோ விஷயமறியச் சென்றிருக்கிறான்.

அப்போது அவளிடம் இருக்கும் பணத்தைப் பார்த்துவிட்டான். பணப் பேராசையினல் அதை எடுத்துக்கொண்டு அவளைக் கொலை செய்திருக்கவேண்டும் என்று தீர்மானித்தேன். வீரப்பனைக் கொண்டு உளவறிந்ததில் அந்த நம்பருள்ள நோட்டுக்கள் பொன்னுசாமியிடம் இருப்பதாயும் அவன்தான் இக் கிழவியைக் கொன்றவன் என்றும் தெரிந்துகொண்டேன்.

இந்த தகவல்களை எல்லாம் கண்டுபிடித்துப் போலீஸாரிடம் கூறிப் பின் அவனைக் கைது செய்யப்போவதற்குள் உன் பிதாவே அவனைக் காட்டிக்கொடுத்துக் கைதியாக்கிய விவரத்தைப் போலீஸார் மூலம் தந்தியினலறிந்தேன். அதன் பிறகு, அவன் கோதண்டத்தையும் காமுவையும் காட்டிக்கொடுத்துப் பணம் பெற்றதுமுதல் சகல விஷயங்களையும் விளக்கிவிட்டுப் பிறகு தான் மாசிலாமணியின் உண்மையைக் கூறி அவனையும் வெளிக் கிளப்பினேன்.

ராஜா! உன் பிதா முன்பு இருந்த மாதிரியும் இப்போது திருந்திய மாதிரியுந்தான் எனக்கு மிக மிக வியப்பாகவிருக்கிறது. அவருடைய இளைய மனைவியை அறவே வெறுத்துவிட்டார். குழந்தைகளை மட்டும் கைவிட மனமில்லை. அவைகளை வைத்துக்கொண்டு தான் தனித்திருப்பதாகத் — தீர்மானித்துவிட்டதாகத் தெரிவித்தார் — என்று கூறிக்கொண்டிருக்கையில் ராஜசேகரனின் பிதாவும் சில குழந்தைகளும் அங்கு வந்தார்கள்.

வந்த பையன்களில் ஒருவன் ராஜசேகரனைப் பார்த்ததும் "அப்பா! இந்த மாமாதான் அன்று ஒரு மூட்டையைக் கொடுத்துச் சென்றவர் என்று வியப்புடன் கூறினன். அதே க்ஷணம் அவன் பிதா!;ராஜசேகரனை இறுகத் தழுவிக்கொண்டு "கேசவா! இவன் அன்னிய மாமா வல்ல. உன் தாயார் யாரை தனக்கும் உங்களுக்கும் பரம த்வேஷியாக நினைத்தாளோ அதே ராஜசேகரன் இவன் தான். உனக்கு என்னிடத்தில் எத்தனை பாத்யதை யிருக்கிறதோ அத்தனை பாத்தியம் இவனுக்கும் உண்டு. இவன்தான் உனது மூத்த தமயன்." என்று அவர் கூறி முடிக்குமுன் அந்த பையன் "அப்பா! இவரா எனது தமயன்! இத்தனை நல்லவரான இவ

ரையா எங்கம்மா சதா திட்டுவா! நீங்களும் கூடச் சேர்ந்து திட்டினீர்கள். ஏன் அப்பா அப்படி சொல்கிறீர்கள். ஐயையோ! அன்று இவருடனேயே இவரை நீங்கள் திட்டியதைக் கூறிவிட்டேனே..... அண்ணு! கோபியாதீர்கள். இதோ நீங்கள் வாங்கிக்கொடுத்த சொக்காய்தான் போட்டுக் கொண்டிருக்கிறேன்.'' என்று விளையாட்டுடன் கூறினன்.

இதைக் கேட்ட பிதா "இவனு அன்று உங்களுக்கு வாங்கிக் கொடுத்தது? அடாடா! ராஜசேகரா! நீயா அத்தனை வரிசைகள் வைத்தாய். உன்னுடைய அபாரமான குணத்தின் மகிமை யறியாது பாவியாகி விட்டேனே!'' என்று விசனித்தார். தந்தையும் மகனும் பரஸ்பர அன்போடு தழுவிக் கொண்டார்கள். மணியன் ஆயுளி லேயே கண்டறியாத அந்த பூரிப்பும் பொங்கும் காதலர்களின் உல்லாசச் சந்திப்பும் கண்டு மட்டற்ற மன மகிழ்ச்சியை அடைந்தான். இத்தகைய ஆநந்தக் காட்சியினுல் தன் ஜன்மமே சார்த்தக மாகியதாக எண்ணி அன்று அத்தனை பெயர்களுக்கும் அவ்விடத்தி லேயே விருந்து வைக்க ஏற்பாடு செய்துவிட்டான்.

துப்பறியும் நாயுடுவின் மகா தீரத்தினுலும் சாமர்த்தியத்தினு லும் பல நாளையக் கைதிகள் பிடி பட்டதோடு தப்பி யோடிய கைதி களும் பிடி பட்டார்கள். ஆபத் ஸகாய நிலயம் என்று நடத்தி ஊரை ஏமாற்றிப் பொருள் பறித்ததையும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களையும் கண்டுபிடித்து ஒப்படைத்ததோடு தான் பொன்னு சாமியை யறியும் பொருட்டு 500 ரூபாய்க்குச் செக்கு கொடுத்ததை யும் மீட்டுக்கொண்டார். அதே போன்று கொடுத்திருந்த பலருக்கும் கூடிய வரையில் இந்தக் கூட்டத்தவரிட மிருந்து பொருளை வாங்கிக் கொடுத்தார்.

வீரப்பன் முக்கியமான உளவுகளை எல்லாம் சொல்லி மன்னிப்பு கேட்டுக் கொண்டதால் அவனுக்கு அதிகமான தண்டனை இன்றி சிறிது தண்டனை ஏற்பட்டது. மற்ற எல்லோருக்கும் சட்டப்படிக்குக் கடுங் காவல் தண்டனைகளும், கொலை செய்த பொன்னு சாமிக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டன. வீராயியைக்

கொலை செய்ததுமல்லாமல் மற்றோர் அழகிய பெண்ணை யடையும் பொருட்டு அவளுடைய தகப்பனையும் இவன் கொலை செய்த விவரமும் இந்த வழக்கு மூலமாகவே ருஜுவாகி விட்டதால் தூக்கு தண்டனை யடையப் பெற்றான்.

இவன் தூக்கு தண்டனை யடையப் பெற்றான் என்றதைக் கேட்டதும் காமுவின் மனம் சந்தோஷத்தை யடையவில்லை. ஏனெனில் அவனால் பல துன்பங்களை யனுபவித்துப் பலர் வருந்தியது போல இவனும் அம்மாதிரி வருந்தாது திடீரென்று இறப்பது பற்றி வெறுத்தாள். ஆயினும் இம்மட்டுடன் இப்பாவி தொலைவதால் இனி உலகில் தீங்குகள் நேராது என்ற ஓர் சாந்தியை யடைந்தாள்.

ராஜனுக்கு தனது தாய்க்குத் தாயான பாட்டியாரைப் பார்க்கவேண்டும். இந்த அபாண்டங்களை இனியாவது நம்பாது தான் நிரபராதி என்பதை ஏற்றுக்கொள்வாளா! என்ற எண்ணம் உண்டாகியது. அவளைப் பார்க்க அதிக ஆவல் கொண்டான். அன்றிரவே தன் தந்தை, காமு, பாரதி ஆகியவர்களுடன் பாட்டியின் ஊருக்குச் சென்றான்.

எளியாரை வலியாரடித்தால் அவ்வலியாரைத் தெய்வமடிக்கும் என்பது பொய்யாகுமா? அவன் தன் வீட்டிற்குச் சென்று பார்க்கையில் வீட்டில் தன்னை எடுத்துத் தூக்கி வளர்த்த ஆயா கிழவியைத் தவிர வேறு யாரையுங் காணவில்லை. வீடு முற்றுங் காலியாக இருக்கக் கண்டு திடுக்கிட்டுக் கிழவியை விசாரித்தான்.

கிழவி ராஜசேகரன் திடும்பிரவேசமாக வந்திருப்பதைக் கண்டு வியப்பும் திகைப்புங் கொண்டு "தம்பீ ! ராஜா!" என்று ஆசையுடன் அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு...என் சின்ன ராஜாவே! தெய்வம் ஒண்ணு இருக்கிறது என்பதை இனியாவது உலகம் நம்புமா! மகா சுத்த வீரனை உன் தலையிலே பழியைப் போட்டு அந்த ஏழைப் பெண்ணை அடித்துத் துரத்தினார்களே! அது வீண் போகுமா!

ராஜா! நீ அன்னிக்கி கொளத்தங் கரையோடே போய்விட்

டாயே அதக்கப்பறம் இடையிலே எத்தினி மாசமாய்ப் பூடுதே. உன் மாமன் மனைவிக்குத் தங்கச்சி ஒரு முண்டச்சி வந்திருந்தாளே: அவ பலே கைதேர்ந்தவ. அவள் உன் மாமாவையே கைப் பிடித்துவிட்டாள். அதன் பலன் உடனே வந்துவிட்டது.

பிறகு மாமனும் மாமியும் அதைக் கலைக்கப் பாத்தார்கள். இந்த ரகஸியம் எப்படியோ பரவி ஊருக்கெல்லாந் தெரிந்துவிட்டது. உடனே எல்லோரும் இந்த வீட்டுக்கு கட்டுப்போட்டுவிட்டார்கள். இதே அவமானத்தினாலும் அந்த பாவி மருந்து வைத்ததினாலும் உன் மாமன் இறந்துவிட்டான். பிணம் எடுப்பாரற்று நாறிற்று. ஊரோடு கட்டு போட்டு ஒருத்தரும் வரவில்லை. பிணத்தை வண்டியில் போட்டுக்கொண்டு போய் கொளுத்தி விட்டார்கள்.

அன்றே அக்காளும் தங்கையும் ஓடிவிட்டார்கள். இந்த விசனமும் அவமானமும் தாங்காமல் உன் பாட்டி 'இனி இந்த ஊரிலே இருக்கமாட்டேன். எங்காவது போய்விடுகிறேன்' என்று காசி யாத்திரை போய்விட்டார்கள். அந்தம்மாள் போகும்போது ...கிழவி! நீ வீட்டிலேயே ஜாக்ரதையாக இரு. என் ராஜாவை நான் செய்த சதி என்னையே வாட்டிவிட்டது. அவனை எங்கு தேடியும் காணவில்லை. ஒருகால் அவன் சென்ற வேகத்தில் ப்ராணனைத் தியாகம் செய்துகொண்டானோ என்னவோ என்கிற பயமாயு மிருக்கிறது.

கிழவி! அவன் எங்கேயாவது தப்பிப் பிழைத்து எப்போதாவது இங்கு வருவானே யானால் இந்த விஷயங்களை எல்லாங் கூறி இவ் வீட்டையும் சொத்தையும் ஒப்புவித்துவிடு. என் விதியை நான் நொந்துகொள்கிறேன்.'' என்று வருத்தப் பட்டுக்கொண்டே போய் விட்டார்கள்.

ராஜா! இதோ சாவி. எல்லாவற்றையுங் கூறிவிட்டேன். எனக்கும் வயதாகிவிட்டது. நான் எத்தனை நாளைக்குக் காவல் காக்க முடியும். என்னையும் உன் பாட்டி போலக் கைவிடாது காப்பாற்று.'' என்று சகல வரலாற்றையுங் கூறிக் கண்ணீர் விட்டாள்.

இதைக் கேட்ட ராஜனுக்கு விசனம் தாங்கமாட்டாது பொங்கி விட்டது. பழங் கதைகளை நினைத்துப் புலம்பினான். தன் பாட்டியை எப்படியாவது கண்டு பிடித்து அழைக்க எண்ணினான். கிழவிக்குத் தேறுதல் கூறினான். காமுவும் தனக்கு உதவி செய்த கிழவியை வணங்கி நடந்த சகல வரலாற்றினையுங் கூறினாள். நடந்த விஷயங்களைக் கேட்டு கிழவி ஆச்சரிய சாகரத்தி லாழ்ந்தாள்.

---

## 28-வது அதிகாரம்

### சந்தோஷச் சூரியனின் மந்தகாஸ உதயம்

உலகத்தில் மக்களுக்கு இரவும் பகலும் எப்படி மாறி மாறி வருகிறதோ அப்படியே துன்பமும் இன்பமும் மாறி மாறி வருவது சகஜமல்லவா? ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் இந்த அனுபவத்தைக் கண்கூடாகக் காணலாம்.யாரும் நீடித்துத் துன்ப மனுபவிப்பதில்லை. அப்படியே இன்பமும் அனுபவிப்பதில்லை. காலச் சக்கரம் போல மாறிக் கொண்டே தானிருக்கும்.

நமது கதா பாத்திரர்களுக்கும், நாயக நாயகிகளுக்கும் துன்ப மனுபவித்த கொடிய இருள் மயமான இரவு நீங்கப் பெற்று இனிமையான இன்ப மனுபவிக்கும் இன்பச் சூரியன் உதயமாகி விட்டதால் ஜகத் ரக்ஷகனாகிய பரம்பொருளின் கருணாகடாட்ச மாரி இவர்கள் மீது படலாயிற்று.

வேண்டுமென்று தான் இதில் சம்மந்தப்படாத அன்னியனென்று காட்டி நடக்கும் பொருட்டு காமுவை தேடிக் கொடுத்தது மல்லாமல் கோதண்டத்தையும் குற்றவாளியாகப் பிடித்து வருத்துவதற்குச் சில உத்யோகஸ்தருக்கு உடந்தையாக விருந்த பொன்னு

சாமியின் ஊழல் வெளியாகிக் கோதண்டம் விடுதலை பெற்றதும் அவர் மட்டற்ற சந்தோஷமே அடைந்தார்.

கோகிலமும் கோதாவரியும் குழந்தை மங்களத்தை விட்டுப் பிரிய மனமற்றவர்களாய் காமுவைத் தம் வீட்டிலேயே வைத்துக் கொள்ளச் சம்மதித்தார்கள். காமுவும் அந்த பெரிய மனிதர்களின் பாதுகாப்பி லிருக்க பிரியப்பட்டு இசைந்தாள். அவளுடைய கவலை யும் மனத் துயரமும் சிறிது நீங்கப் பெற்றவளானாள்.

ராஜசேகரனின் முயற்சியினால் ஆசிரமத்து மானேஜரின் லஞ்சப் பேராசை வெளியாகியதால் மணியன் உடனே அந்த மானேஜரைத் தள்ளிவிட்டு கோதண்டத்தை அதற்கு மானேஜராக நியமித்ததோடு ராஜன் ப்ரதிக்கினைப்படிக்கு பழய தலைவியை அங்கு வேலைக்கு அமர்த் தினான். மாணவிகளுக் கெல்லாம் சந்தோஷம் பொங்கியது.

ஆசிரமத்தின் விதிப்படிக்கு அங்குள்ள மாணவிகளுக்குச் சரி யானபடி திக்கில்லை என்றால் தக்க கணவனைத் தேடி ஆசிரமத்தி லேயே விவாகத்தைச் செய்யலாம் என்று இருப்பதால் வெகு குதூ கலத்துடனும், மனப் பூர்த்தியான திருப்தி யுடனும் ஆடம்பரமே இல்லாமல் பாரதிக்கும் ராஜசேகரனுக்கும் கல்யாணத்தை மணியனே தனது செலவில் முடித்து வைத்து அபாரமான மன மகிழ்ச்சியை அடைந்தான்.

அன்று ராஜன் செய்த சபதத்தை நிறைவேற்றி விட்டான். அவர்களுக்குள்ள ஆநந்தத்தைக் கூறவேண்டுமா! பழம் நழுவிப் பாலில் விழுந்தது. அதுவும் நழுவி வாயில் விழுந்தது போலாகி விட்டது. தக்க மனிதர்களைக் கொண்டு தன் பாட்டியை தேடிப் பிடித்து அழைத்து வந்து நடந்த விவரங்களைக் கூறித் தேற்றினான். கிழவிக்கு நேர்ந்த அபாரமான துயரங்கள் இருப்பினும் இழந்து விட்டதாக நினைத்த பேரனைக் கண்டதும் பரம சந்தோஷ மடைந் தாள். ஊரார் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு பரிசுத்தவானாகிய ராஜனை அனியாயமாக மனம் நோகச் செய்த வதைதான் தனக்கு பரிபூர்ணமாகத் தாக்கிவிட்டதென்று பல முறை அவனிடமே கூறி விசனித்தாள்.

ராஜனின் காதலியாகிய பாரதியைக் கண்டு முன்னிலும் அதி கரித்த சந்தோஷத்துடன் கட்டிக்கொண்டு "என் ராஜாவின் மன மகிழச் செய்யும் மாதரசியே!'' என்றுக் குலாவினாள். அந்த இடமே ஓர் சந்தோஷ விலாசமாக ஆய்விட்டது. ராஜனின் பந்தாட்ட சிநே கிதர்கள் ஆயிரக் கணக்காகக் கூடி ராஜனைக் கட்டித் தழுவி தக்க மரி யாதைகளைச் செய்து தமது அன்பைக் காட்டினார்கள்.

அக் கூட்டத்தில் முன்பொரு சமயம் பாரதியை ரயில் ஸ்டேஷனிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் சென்ற வாலிபனும் வந்திருந்தான். அவன் பாரதியை நோக்கி, "அம்மா! நீங்கள் என்னை நம்பாது என் வீட்டிலிருக்கப் பயந்து சொல்லாமல் சென்றுவிட்ட தானது என் மனத்தை வதைத்துவிட்டது. நான் எனது உடன் பிறந்த சகோதரி போலவே நினைத்ததற்குத் தாங்கள் வித்யாசம் எண்ணியது என்னுடைய ப்ராணனைக் குத்துவது போலவிருந்தது.'' என்று கூறி முடிக்குமுன் பாரதி

"ஐயா! தாங்கள் சொல்கிறபடி நான் நினைக்கவே இல்லை. மாசிலா மணியைப் போலவே எனது ஆபத்தில் உதவிய உங்களை நினைத்தேன். உங்கள் மனைவி இம்மாதிரி கூறினார்கள் என்று நடந்த வரலாறுகளைக் கூறினாள். இதைக் கேட்ட அவ் வாலிபன், உண்மையை உணர்ந்தான்...'' அடாடா!...இப்படியா நடந்தது. ஐயோ! நான் முட்டாள்தனம் செய்துவிட்டேன். என் மனைவிக்கு சில மாதங்களாக ஓர் விதமான சித்தப்பிரமை பிடித்திருக்கிறது.

அதை சிலர் சூனியம் என்றும், சிலர் பிசாசு என்றும், சிலர் பைத்தியம் என்றும் பலவாறாகக் கூறுகிறார்கள். அந்நிலைமையில் அவள் நினைவு தப்பி ஏதோ சொல்லி இருக்கிறாள். அதை நம்பி நீங்கள் இம்மாதிரி சென்று விட்டீர்கள். உம்...யாவும் காலத்தின் கோலம். எல்லாம் நன்மைக் கென்றே நம்புவதுதான் நலம். மலை போல வந்த கஷ்டங்கள் முற்றும் பனி போல நீங்கிவிட்டதுதான் சந்தோஷம். எல்லாம் ஈசன் செயல்...என்றான்.

உண்மையை அறிந்த பிறகு பாரதி தான் ஏமார்ந்துவிட்டதைப் பற்றி விசனித்தாள், பின்னர் நாயுடுவுக்கும் அம்புஜத்திற்கும் தக்க மரியாதைகள் விருந்துகள் செய்து தமது நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொண்டார்கள். பிறகு எல்லோரும் ஆசிரமத்தை விட்டு அவரவர்கள் விடுதிக்குச் செல்லக் கிளம்பினார்கள். ஆசிரமத்து மாணவிகளுக்குப் பழய தலைவியே வந்து சேர்ந்துவிட்ட சந்தோஷம் ஒரு புறம் பொங்குகின்றது. லஞ்ச தேவதையின் ஆட்சியால் ஆசிரமமே கலகலத்து விட்டபோதிலும் பாரதிக்கு நல்ல காலம் பிறந்து அவள் மனத்தில் பொங்கும் காதல் பூரிப்படைந்து தன் காதலனுடன் புக்ககம் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றியும், லஞ்சம் வாங்கும் ஊழல் வெளியாகியதைப் பற்றியும் பரம சந்தோஷ மடைந்தார்கள்.

ஆனால் பாரதியைப் பிரிந்து விடவேண்டுமே என்ற விசனமும் பாதிக்காமலில்லை. பாரதி எல்லா மாணவிகளையும் தனித்தனியே ஆலிங்கனம் செய்துகொண்டு, "என் ப்ரிய சகோதரிகளே! நான் சென்று வருகிறேன். என்னை மறவாதீர்கள். ஈசன் ஒருவன்

ரக்ஷிக்க இருக்கிறான் என்பதற்கு எனது சரித்திரமே ஆதாரமாகிவிட்டது. இதையே நம்பி, விசனப்படாது நல்ல மார்க்கமாக ஜீவியத்தை நடத்துங்கள். தலைவியின் ஆணையை மீறாது உத்தமமாக நடந்து கொள்ளுங்கள்.

என்னருமைத் தலைவியே! தங்களுடைய தயவினால்தான் நான் இம்மாதிரியான பதவியை அடைந்தேன். என்னருமைக் காதலருக்கு இன்ப மணமாலை சூட்டினேன். என்னுருயிர் அண்ணனை அடைந்து களித்தேன். சகல கஷ்டமும் நிவர்த்தியாகப் பெற்றேன். உங்களுடைய ஆசீர்வாதம் என்றும் நிலைத்திருக்க அருள் புரியவேண்டும். நான் சென்று வருகிறேன். எனது பக்தி மயமான அன்பைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?..... என்று கண்ணீர் பெருகக் கூறி வணங்கி விடை பெற்றுக்கொண்டாள்.

சூடாமணி மட்டும் பாரதியின் பிரிவால் வாடித் தவிக்கின்றாள். அழுது அழுது முகமே வீங்கிவிட்டது. அவள் ஓர் அனாதைச் சிறுமியாதலால் பாரதியினிடம் பரம ப்ரீதி வைத்திருந்தாள். பாரதி அவளுடைய நிலைமைக்கு வருந்தி ஆசிரமத்துத் தலைவரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு சூடாமணியைத் தன்னுடன் அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தாள்.

பிறகு அங்குள்ள ஒவ்வொருவரிடத்திலும் தனது நன்றியறிதலைத் தெரிவித்து வந்தனஞ் செய்து உத்திரவு பெற்றுக்கொண்டு பிரயாண சித்தமானார்கள். பாரதிக்கும், ராஜசேகரனுக்கும், மாசிலாமணிக்கும் உள்ள சந்தோஷத்தைக் கூறவேண்டுமா! எல்லோரும் பழய வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு வாணீபுரத்திற்கே சென்றுவிட்டார்கள். மாண்டவர்கள் மீண்டதுபோலும், மறைந்த பொருள்கள் திரும்பக் கிடைத்ததுபோலும் இவர்கள் கஷ்டங்கள் நீங்கப்பெற்றுப் புத்துயிருடன் வந்த சந்தோஷச் செய்தி ஊர் முற்றும் பரவி எல்லோரும் வியந்து மகிழ்ந்தார்கள்.

மாசிலாமணிக்கு தினே தினே சந்தோஷ ஔஷதத்தினாலேயே உடம்பு தேறிப் பழய மாசிலாமணியாகிவிட்டான். பாரதியும் ராஜசேகரனும் தங்களுடைய சந்தோஷத்தின் பரிசாக மாசிலாமணிக்குச் சூடாமணியைக் கொடுத்து தக்க முறையில் திருமணத்தை முடித்துவைத்தார்கள். ஒரு தம்பதிகளின் மூலம் இரு தம்பதிகளாகிவிட்டார்கள். காதலர்கள் கருத்தொருமித்து இல்வாழ்க்கை நடத்தும் ஆநந்தத்தைக் கூறவேண்டுமா!

* * * *

“ஹா! ஹா! யாரது, மூச்சு திணறுகிறது. ...
...சூடாமணீ...இல்லை...இல்லை...ஆ....தெரிந்து...

ஆவிக்கமுதம்போன்ற கரங்கள்...என் ஜீவாதாரத்தின் இனிய மலர் போன்ற கரங்கள். ஆம்! ஆம்! என் காதல் கண்ணாளரின் கரத்தின் தன்மையை நான் அறியமாட்டேனா......என்று சந்தோஷத்தினால் நகைத்து உள்ளம் பூரித்தபடியே தன் கண்ணைப் பொத்தி இருக்குங் கரங்களை விலக்கித் தான் பிடித்துக்கொண்டு எழுந்து அதற்குப் ப்ரதி சம்பாவனையாகத் தன் காதலனை மூச்சுச் திணறும்படியாகச் செய்துவிட்டாள்.

கண்மணி! இதே இடத்தில் முன்பு ஒரு காலத்தில் இந்தப் பாவியின் மனம் எவ்வளவு தத்தளித்திருக்கும்! உன்னருமைச் சகோதரனைக் கண்டு மனம் பட்ட பாட்டைக் கூறத்திறமா!...அந்தோ!...அந்த சம்பவத்தை நினைத்தால் என் இருதயத்தில் இப்போதும் வேலை செய்கிறது....ஈசனின் கிருபையினால் இம்மட்டும் எல்லா கஷ்டங்களும் நீங்கப்பெற்று மனம் நிம்மதியாயிற்று; எனினும் உன் தாயாரின் விஷயம் மட்டும் மறக்கக்கூடியதா!......

இன்பவல்லீ!...அதோ பார்!...என்ன ஆநந்தக் காட்சி! என்ன மனோகரமான சந்தோஷத் தோற்றம் பாரு...இவனையும் இவ்வாறு காணப்போகிறோம் என்று எண்ணினோமா! சூடாமணியுடனும் நம் கண்மணி சந்திரனுடனும் என்ன ஆர்வத்தோடு—ஆநந்தத்தோடு—குலாவிக் களித்து மகிழ்கிறான் பாரு......கடவுளின் செயல் எப்படி முடிந்தது பார்த்தாயா? எல்லாம் நன்மைக்கென்றே நினைத்து பொறுமையோடு இருந்தால் யாவும் நலமாகவே முடியும் என்ற நம்பிக்கையோடு இருந்தேன். எல்லாம் த்ருப்திகரமாக முடிந்தன. அதோ! மங்களவல்லி தவழ்ந்து வருகிறாள். அடாடா! இந்தக் குழந்தையால் அவள் தாயாருக்கு எத்தனை கஷ்டங்கள் உண்டாயின. அவள் ஓர் உண்மைச் சன்யாசினிபோலல்லவோ ஆய்விட்டாள்! ......உம்......ஒரு மனிதனின் தீமை பலரை வாட்டிவிட்டது......" என்று கூறி மங்களவல்லியைத் தூக்கி இருவரும் மாறி மாறி முத்த மிட்டுக் கொஞ்சினார்கள். "என் இன்ப நிலையமே! ஈடில்லாத் தங்கமே! நமக்குள் பொங்கி எழுந்த காதலும் பூர்த்தியான பலனைக் கொடுத்தது. உன் சகோதரனின் நிலைமையும் சந்தோஷமாயும் மங்களகரமாயும் முடிந்தது. இந்த நித்திய கல்யாண பேராநந்த வைபவ சுகத்தைவிட நமக்கு வேறு வேண்டுமா" என்று த்ருப்தியுடன் கூறிக் கொண்டே பொங்கும் காதல் வெள்ளத்தில் திளைந்து பூரித்து வருகிறார்கள்.

182979

மங்களம்.

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
...ல் படுப்பதூ உம் இல்.

—திருக்குறள்.

சுபம்!!

சுபம்!!!

...RESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS.